REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

மின்னிதழ்
2024 ஜூலை 27 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN 92 தினகரன்

வருட. 92 இல. 178 | Saturday 27, July, 2024 | 12 பக்கங்கள் | 50/-

ஜனாதிபதி தேர்தலுக்காக

## சுயேட்சை வேட்பாளராக கட்டுப்பணம் செலுத்தினார் ரணில்



ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுவதற்காக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டுப்பணம் 06

# IGP யின் பணி இடைநிறுத்த உத்தரவை வலுவற்றதாக்கவும்

## சபாநாயகரிடமும் பாராளுமன்றத்திடமும் பிரதமர் கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொலிஸ் மாஅதிபரின் பணி இடைநிறுத்த உயர் நீதிமன்றம் உத்தரவு செல்லுபடியற்றதாக்கப்பட வேண்டுமென பிரதமர் தினேஷ் குணவர்த்தன, சபாநாயகரிடமும் பாராளுமன்றத்திடமும் நேற்று கேட்டுக்கொண்டார்.

பொலிஸ் மா அதிபர் தொடர்பில் உயர் நீதிமன்றம் நவம்பர் 11 ஆம் திகதி வரை பணி இடைநிறுத்த உத்தரவை வழங்கியுள்ளமை குறித்து நேற்று பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றும்போதே இவ்வாறு கேட்டுக்கெண்டார்.

அரசியலமைப்பு சபை பாராளுமன்றத்தின் முக்கிய பகுதிகளில் ஒன்றாகும். இந்த பாராளுமன்றமே அதை உருவாக்கியது, நியமித்தது மற்றும் அதற்கான அதிகாரங்களை வழங்கியது. உங்கள் தலைமையில் கூடும் அரசியலமைப்புச் சபைக்கு இவ்வாறு செயற்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காதிருப்பதற்காக இந்த



நடவடிக்கைகளில் இறங்குவது ஆபத்தான நிலைமையாகும். எனவே, சபாநாயகர் அவர்களே, 2024 ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வர்த்தமானியை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுக் காலை வெளியிட்டுள்ளது.

எமது பொலிஸ் மா அதிபர் தொடர்பில் நவம்பர் 11 ஆம் திகதி வரை பணிகளை இடைநிறுத்தி வைத்துள்ள உயர் நீதிமன்றத்தின் உத்தரவு செல்லுபடியற்றதாக்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் சபாநாயகருக்கும், பாராளுமன்றத்திற்கும் நினைவுபடுத்துகின்றோம்.

பொலிஸ் மாஅதிபர் நியமனம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தடையுத்தரவை ஏற்க முடியாதென்றும் அரசியலமைப்பு பேரவையின் அதிகாரத்தை நீதிமன்றத்தால் சவாலுக்குட்படுத்த முடியாது என்பதால் பொலிஸ் மாஅதிபர் நியமனம் விவகாரத்தில் அரசியலமைப்புப் பேரவை தலையிட்டு உரிய தீர்வை வழங்க வேண்டுமென்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது தேர்தலில் போட்டியிடவுள்ள 06

## பொருளாதார பரிமாற்ற சட்டமூலம் நிறைவேற்றம்; ஆதரவளித்த கட்சிகளுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு

■ அனைவரும் இணைந்து திட்டத்தை முன்னெடுத்து செல்வோமென்றும் ஜனாதிபதி அழைப்பு



நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதையில் வழிநடத்தும் பொருளாதார பரிமாற்ற சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவளித்த அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்கு ஒன்றிணையுமாறு சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

நாட்டில் ஏற்றுமதி சார்ந்த டிஜிட்டல் மற்றும் பசுமை பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு தேவையான நிர்வாக மற்றும் நிறுவன ரீதியான கட்டமைப்பை இந்த சட்டமூலத்தில் உள்ளடக்கியுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். 06

IGP யின் நியமனத்தில்

## எந்த தவறான தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை

### சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன

**லோரன்ஸ் செல்வநாயகம்**




பொலிஸ் மாஅதிபர் நியமனத்தில் அரசியலமைப்பு பேரவையின் தலைவரென்ற வகையில் தாம் எந்த தவறான தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லையென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் 06

## ஜனாதிபதி தேர்தல் செப்டெம்பர் 21ஆம் திகதி நடத்தப்படும்

தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

### வேட்புமனு ஏற்பு ஒகஸ்ட் 15ஆம் திகதி



ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இது தொடர்பாக விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றையும் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்படுமெனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராஜகிரிய, சரண மாவத்தையிலமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் வேட்பாளர்கள் தமது வேட்பு மனுக்களை தாக்கல் 06

IGP நியமனம் தொடர்பான விவகாரம்

## சிக்கல்களுக்கு தீர்வு காணும் பொறுப்பு அரசியலமைப்பு பேரவைக்கே உரியது

### சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொலிஸ் மாஅதிபர் நியமனம் தொடர்பாக நிலவும் சிக்கல்களுக்கு தீர்வு காணும் பொறுப்பு அரசியலமைப்பு பேரவைக்கே காணப்படுவதாக சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பொலிஸ் மாஅதிபர் நியமனம் தொடர்பில் உயர் 06

நகை கடைகளில் திடீர் சோதனைகள்

## தங்கநகை வியாபாரிகள் சம்மேளனம் சுங்க அதிகாரிகளுடன் சந்தித்து பேச்சு

### கிழக்கு ஆளுநர் செந்தில் ஏற்பாடு



இலங்கை சுங்க திணைக்களத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் சோதனைகள் தொடர்பில் அகில இலங்கை தங்க நகை வியாபாரிகளின் சம்மேளனம் சுங்க திணைக்களத்துடன் கலந்துரையாடியுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநரும், இ.தொ.கா. தலைவருமான செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் சுங்கவரி பணிப்பாளர் நாயகம், அகில இலங்கை நகை வியாபாரிகளின் சம்மேளன தலைவர், கல்முனை வர்த்தக 06

ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு:

## நாடு முழுவதும் பாதுகாப்பு வழங்க அவசர உத்தரவு

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன்


**லோரன்ஸ் செல்வநாயகம்**



தேர்தல் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தலை அறிவித்துள்ளதால் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள், நாட்டு மக்கள் மற்றும் நாட்டின் முழுமையான பாதுகாப்பையும் உறுதிப்படுத்த தேவையான 06

ஜனாதிபதி தேர்தல் 2024

## கட்டுப்பணம் ஒகஸ்ட் 14ஆம் திகதிவரை செலுத்தலாம்



ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை எதிர்வரும் 14ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளை தவிர்ந்த ஏனைய நாட்களில் செலுத்த முடியுமென அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தும் நடவடிக்கை நேற்று 26 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு 06



03

'உருமய' அரசியல் வேலைத்திட்டமல்ல

## தேர்தல் காலங்களிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

## ஜனாதிபதி வேட்பாளர் திங்களன்று தீர்மானம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான தீர்மானம் நாளை மறுதினம் திங்கட்கிழமை (29) அறிவிக்கப்படுமென கட்சி தெரிவித்துள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் சபைக் கூட்டம் எதிர்வரும் திங்களன்று கூடும் போது அதற்கான தீர்மானம் எட்டப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

## வடக்கில் உற்பத்தி செய்யப்படும் பழங்கள் விரைவில் கொழும்பில்

### போக்குவரத்து அமைச்சுடன் பேசவும் தீர்மானம்



வடமாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பழங்களை கொழும்புக்கு கொண்டு வந்து சலுகை விலையில் பாவனையாளர்களுக்கு வழங்கும் வேலைத்திட்டம் விரைவில் முன்னெடுக்கப்படுமென வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார். வடக்கிலுள்ள விவசாயிகளுக்கு சந்தை வாய்ப்பை பெற்றுக் 06

கட்டார் தலைநகரில் தீ விபத்து

## மூன்று மாடி கட்டடத்தில் தங்கியிருந்த இலங்கை பெண்கள் உட்பட பலர் காயம்



கட்டார் தலைநகர் தோஹாவிலுள்ள மூன்று மாடிகள் கொண்ட விடுதியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் இலங்கை மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த பெண்கள் பலர் காயமடைந்துள்ளனர்.

இக் கட்டடம் 03 மாடிகளை கொண்டதெனவும் இரண்டாவது மாடியிலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீ பரவியதையடுத்து, அங்குள்ள பெண்கள் பலர் உயிரைக் காப்பாற்றிக் 06

எமது அரசாங்கத்தில்

## இலங்கை பொதுநலவாய அமைப்பிலிருந்து அகற்றப்படும்

### முன்னாள் எம்.பி. லால்காந்த



"எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுத்து மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது"

தமது நிர்வாகத்தின் போது இலங்கை பொதுநலவாய அமைப்பிலிருந்து அகற்றப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்று உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.டி.லால்காந்த 06

## பாண், பேக்கரி உற்பத்திகள் 10 ரூபாவால் குறைப்பு



பாண் மற்றும் சில பேக்கரி பொருட்களின் விலையை 10.00 ரூபாவால் குறைக்க அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி 450 கிராம் எடைகொண்ட பாண் மற்றும் ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலை 10 ரூபாவினால் குறைவடையவுள்ளன.

வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ இவற்றின் விலைகளை இரண்டு நாட்களுக்குள் குறைக்குமாறு விடுத்த 06

## நீதியான, சுதந்திரமான தேர்தலை அமெரிக்கா எதிர்பார்க்கின்றது

### அமெரிக்க தூதுவர் ஜூலி சங்



ஜனாதிபதி தேர்தல்கள் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறுமென்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவிப்பை வரவேற்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இது ஜனநாயகத்துக்கான இலங்கையின் நீண்டகால அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை மக்கள் 06

# தனிநபர் வருமானம் 2048 இல் 20,000 டொலராக அதிகரிக்கும்

## இதற்கான திட்டங்களையே அரசாங்கம் உருவாக்கிறது



தனிநபர் வருமானம் 2048ஆம் ஆண்டளவில் 20,000 டொலராக அதிகரிக்கும் வகையிலான திட்டங்களையே அரசாங்கம் உருவாக்கி வருவதாக போக்குவரத்து, ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

நாட்டில் பாரிய மாற்றத்தை கொண்டு வருவதற்கான சிறந்த அத்திவாரத்தை இடுவதற்கும் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்குமான தேசிய வேலைத்திட்டமாகவே அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார மாற்றம் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார மாற்றம் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

இச்சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நிதி முகாமைத்துவம், ஒழுக்கம் மற்றும் பொருளாதார முறைமை பின்பற்றப்படா விட்டால் மீண்டும் நாடு வங்குரோத்து நிலைக்கு செல்வதை தடுக்க முடியாமல் போகும்.

நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்த சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். அதற்காக அரச மற்றும் தனியார் துறைகளை பயனுள்ள விதத்தில் உற்பத்தி செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தும் நோக்கமும் இத்திட்டத்தில் உள்ளது.

நாம், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சர்வதேச ரீதியில் எமக்குள்ள நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு பெற்றுக்கொண்ட கடன்களை செலுத்த வேண்டியுள்ளது.

நிதியமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்டுள்ள வேலைத்திட்டங்களாலேயே, நாம் மீண்டும் சுவாசிக்க முடிகிறது. இதனால்தான் தற்போது நாட்டில் வரிசை யுகம் இல்லாமல் போயுள்ளது எனத் தெரிவித்தார்.

### பொலிஸ் மாஅதிபர் தொடர்பான

# நீதிமன்ற தீர்ப்பை அரசியலமைப்பு பேரவைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை



பொலிஸ் மாஅதிபர் தொடர்பான நீதிமன்ற தீர்ப்பை மீள அரசியலமைப்பு பேரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக சபை முதல்வர், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நீதிமன்ற அதிகாரம் பாராளுமன்றத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என சட்டம் காணப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபராக பணியாற்றுவதை தடை செய்து உயர் நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்டுள்ள தடையுத்தரவு தொடர்பில் சபையில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

17ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஆரம்பத்திலேயே அரசியலமைப்பு பேரவை ஆரம்பிக்கப்பட்டது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் தான் அரசியலமைப்பு பேரவைக்கு வழங்கப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரத்தின் மாற்றம் 21ஆவது திருத்தத்தில் 7(அ) வில் காணப்படுகிறது.

அதன்படி அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று துறையின் ஒரு பகுதியே. அதனால் அது தொடர்பில் அமைச்சரவையில் பேச முடியாது. அது தொடர்பில் கலந்துரையாடினாலும் அமைச்சரவையால் தீர்மானம் எடுக்க முடியாது.

சில நியமனங்களை அரசியலமைப்பு பேரவை அனுமதிக்க வேண்டும். பொலிஸ் மாஅதிபர் நியமனத்திலும் அது பொருந்தும்.

ஜனாதிபதியால் எவருடைய பெயராவது முன்வைக்கப்பட்டால், அதனை உறுதிப்படுத்துவது அல்லது உறுதிப்படுத்தாமல் விடுவது அரசியலமைப்பு பேரவையின் கடமையும் பொறுப்புமாகும். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களை தடை செய்வது உயர் நீதிமன்றத்திற்கு உரிய விடயமாகும். இது தொடர்பில் நாம் விவாதத்திற்கு வரவில்லை. அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் அதனை செயல்படுத்துவது யார் என்பதே தற்போதுள்ள பிரச்சினை. அந்த வகையில் அரசியலமைப்பு பேரவையின் தலைவராக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன செயற்படுவதால், வெளிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு அவர் நாடு திரும்பியதும் இந்த பிரச்சினையை அவரிடம் சமர்ப்பித்து தீர்வொன்றை பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

### தேசிய பொருளாதார திட்டத்தின்

# முதலாவது வரைபடத்தை உருவாக்கும் அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம்

## ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார



தேசிய பொருளாதார திட்டத்தின் வரைபடத்தை உருவாக்கும் முதலாவது நடவடிக்கையாக பொருளாதார மாற்றம் மற்றும் அரச நிதி முகாமைத்துவ பொறுப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதாக ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேசிய பொருளாதார திட்டத்தின் வரைபடமின்றி இதுவரை காலமும் செய்யப்பட்டதால்தான் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து பல்வேறு நெருக்கடிகள் உருவாகின என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அரச நிதி முகாமைத்துவம் பொறுப்பு மற்றும் பொருளாதார மாற்றம் தொடர்பான சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டின் நிதி ஒழுங்கமைப்பை பலப்படுத்துவது தற்போதைய யுகத்தின் அவசிய தேவையாகும். மேற்படி இரண்டு சட்டமூலங்களும் அவசரமாக கொண்டு வரப்பட்ட சட்டமூலங்கள் அல்ல. கடந்த இரண்டு வருடங்களாக நாம் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தை கடந்துள்ளோம். அதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

நாட்டை அராஜக நிலையிலிருந்து பாதுகாக்கும் பொறுப்பு பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் பல்வேறு தரப்பினரும் பல்வேறு கருத்துக்களை தெரிவிக்க முடியும். எனினும் நாட்டை அராஜக நிலையிலிருந்து பாதுகாப்பது பாராளுமன்றத்தின் பொறுப்பாகும். சட்டத்தை மதிக்காத மாற்றுக் குழுக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வீடுகளுக்கு தீ வைத்தனர்.

சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மிக மோசமானவை. அவ்வாறானதொரு காலகட்டத்தை நாம் கடந்து வந்துள்ளோம்.

ஜனநாயக ரீதியில் அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் மாற்று வழிமுறைகள் மூலம் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளை நாம் காண முடிந்தது. அந்த வகையில் நாட்டை பொருளாதாரத்தில் கட்டியெழுப்பிய பின்னரும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதை தடுப்பது அவசியமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உரையாற்ற வழங்கும் சந்தர்ப்பத்தை துஷ்பிரயோகம் செய்ய வேண்டாம்

## எதிர்க்கட்சி தலைவருக்கு பிரதி சபாநாயகர் அறிவுறுத்து



பாராளுமன்றத்தில் உரையாற்ற வழங்கப்படும் சந்தர்ப்பங்களை துஷ்பிரயோகம் செய்ய வேண்டாமென எதிர்க்கட்சித் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ இதனை அறிவித்தார்.

அனாவசியமான விடயங்களை கொண்டு வந்து தேவையற்ற விவாதங்களுக்கு வழிவகுத்து சபா பீடத்தை அசௌகரியத்துக்கு உட்படுத்த வேண்டாம் என்றும் அவர் எதிர்க்கட்சித் தலைவரிடம் கேட்டுக்கொண்டார்.

அரசியலமைப்பை மீறாமல் நீதிமன்றம் தடையுத்தரவு ஒன்றை பிறப்பிக்கும் போது அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளது.

இதை சபையில் சுட்டிக்காட்டிய அவர், 17 முதல் 21 வரையிலான அரசியலமைப்பு திருத்தங்களுக்கும் ஆதரவளித்தவர்களே இங்குள்ளனர் என்றார்.

இதையடுத்து அரசியலமைப்பு பேரவை தொடர்பிலும் விடயங்களை முன்வைக்க எதிர்க்கட்சித் தலைவர் ஆரம்பித்தார்.

அப்போது குறுக்கிட்ட பிரதி சபாநாயகர், ஒரு நிமிடம் என அதற்கு மேலும் நிமிடங்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்றைய தினத்திற்கான விவாதம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதால் காலத்தை வீணடிக்க வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவரிடம் கேட்டுக்கொண்டார்.

வெவ்வேறு விடயங்களை ஆரம்பிக்கும் போது சபையில் அது விவாதமாக மாறி சபையை முன்னெடுத்துச் செல்வதற்கு கஷ்டமாகிவிடுவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அதன் பின் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டபடி மேலும் ஒரு நிமிடம் அவருக்கு வழங்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தினார். இதையடுத்தே எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.




லோரன்ஸ் செல்வநாயகம்

# பொருளாதார மீட்சிக்கு உழைத்த ஜனாதிபதிக்கு மக்கள் பதிலளிப்பர்

## தேர்தலுக்கு பின்னர் இது தெரியவரும்



பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி என்ன செய்தாரென்பதை நாட்டு மக்கள் நன்கறிவர். அதற்கு ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் சிறந்த பதிலை வழங்குவரென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

2022இல், நாட்டில் பணவீக்கம் 70 வீதமாக காணப்பட்டது. இதன்போது சவால்களை ஏற்காமல் தப்பிச் சென்றவர்கள் தற்போது பணவீக்கம் 2 வீதமாக குறைந்துள்ளதால் மறு கேள்வி எழுப்புகின்றனர்.

ஜனாதிபதியும் அரசாங்கமும் என்ன செய்தார்கள் என்று இவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மீண்டும் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படக் கூடாதென்பதற்காகவே பொருளாதார நிலைமாற்றம் அரச நிதி முகாமைத்துவ சட்டமூலங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் நேற்று அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம், பொருளாதார நிலைமாற்ற சட்டமூலம் ஆகிய சட்டமூலங்களை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சர்வதேச பொருளாதார கொள்கைகளுக்கு அமையவே பொருளாதார நிலை மாற்றம் மற்றும் பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த சட்டமூலங்கள் தொடர்பில் அரச நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா முன்வைக்கும் திருத்தங்கள் மற்றும் யோசனைகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மீண்டும் உருவாகி விடக்கூடாது என்பதற்காகவே இவ்விரு சட்டமூலங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. இதில் எவ்வித அரசியல் நோக்கங்களும் கிடையாது. எனினும் இந்த சட்டமூலங்களை எதிர்க்கட்சியினர் ஏன் எதிர்க்கின்றார்கள் என புரியவில்லை எனத் தெரிவித்தார்.

# பாதாள கோஷ்டி பாதுகாக்கப்படுவதை விரும்புவதாலே எதிர்க்கட்சி போர்க்கொடி

## தென்னகோனின் விவகாரத்தால் மகிழ்ச்சியுறுவது யார்?



தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து, நியமனத்தை எதிர்க்கட்சியினர் கேள்விக்குள்ளாக்கி வந்தமைக்கு காரணம் "யுக்திய" திட்டத்தை நடைமுறைப்படுத்தியமையே என ஆளும் கட்சியின் பிரதம கொரடா பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"யுக்தி "வேலைத்திட்டத்தின் மூலம் பாதாள உலகக் குழுவை அழிக்கும் நடவடிக்கையே மேற்கொள்ளப்படுகிறது. எதிர்க்கட்சியினருக்கு தம்மை பாதுகாக்கும் பாதாள கோஷ்டி ஒழிக்கப்படுவதை பொறுத்துக்கொள்ள முடியாதுள்ளது. இதனால்தான் பொலிஸ் மாஅதிபர் நியமனம் தொடர்பில் தொடர்ந்தும் எதிர்க்கட்சியினர் சிக்கல்களை உருவாக்கி வருவதாக அமைச்சர் சபையில் தெரிவித்தார். ஜனாதிபதி, அமைச்சரவை மற்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் நீதிமன்றத்தை அசௌகரியத்துக்கு உள்ளாக்குவதாக ஒரு மாயையை காட்டுவதற்கு எதிர்க்கட்சி முயற்சிக்கின்றது.

ஜனாதிபதியே 21ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வந்து நீதிமன்றத்தை சுயாதீனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தார். இதை அனைவரும் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். அமைச்சரவையும் நீதிமன்றம் மூன்று இடைக்கால தடையுத்தரவுகளை பிறப்பித்திருந்தது. தேவையானால் அதில் தலையிட்டு அதனை அரசாங்கத்தினால் நிறுத்தியிருக்க முடியும். அதில் ஒன்று தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பானது. மற்றது உள்ளூராட்சி சபை நியமனங்கள் சம்பந்தமானது. தற்போது பொலிஸ் மாஅதிபர் தொடர்பில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் பொலிஸ் மா அதிபர் தொடர்பில் மட்டுமே எதிர்க்கட்சி சிந்திக்கிறது.

இந்த தடையுத்தரவு தொடர்பில் அதிகம் மகிழ்ச்சியடைபவர்கள் பாதாள உலக குழுவினரே. ஏனெனில் எதிர்க்கட்சிக்கு பாதுகாப்பு வழங்குவது பாதாள உலகக் குழுவே. அதனால்தான் இந்த விடயத்தில் எதிர்க்கட்சி இந்தளவு முக்கியத்துவத்தை வழங்குகிறது. இல்லாவிட்டால் பொலிஸ் மா அதிபர் தொடர்பில் மட்டும் குரல் எழுப்பும் எதிர்க்கட்சி ஏனைய இரண்டு தடை உத்தரவுகள் தொடர்பிலும் ஏன் மௌனமாக இருப்பதாகவும் அமைச்சர் சந்தேகம் வெளியிட்டார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# லாவோஸில் 31ஆவது ஆசியான் பிராந்திய மன்ற அமைச்சர்கள் கூட்டம்

## இலங்கை பிரதிநிதிகள் குழுவை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய வழிநடத்துகிறார்



லாவோஸ் சோஷலிச மக்கள் குடியரசின் வியாஞ்சான் நகரில் நடைபெறும் ஆசியான் பிராந்திய மன்றத்தின் 31ஆவது அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளும் இலங்கையின் பிரதிநிதிகள் குழுவை வெளியுறவு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய வழிநடத்துகிறார்.

நேற்று (26) ஆரம்பமாகிய இம்மாநாடு, இன்று (27) வரை நடைபெறுகிறது.

இந்த சந்திப்பானது ஆசியானின் தற்போதைய தலைமைத்துவத்தை வகிக்கும் லாவோஸ் சோஷலிச மக்கள் குடியரசினால் நடத்தப்படுகிறது.

பிராந்திய மற்றும் பூகோள பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பாக சுமுகமான சூழ்நிலையில் உறுப்பு நாடுகளுடன் கருத்துகளை பரிமாறிக்கொள்ள இலங்கைக்கு ஆசியான் பிராந்திய மன்றமானது ஒரு பயனுறுதிமிக்க தளத்தை வழங்குகிறது.

ஆசியான் பிராந்திய மன்றத்துடனான இலங்கையின் தொடர்பு 2007 இல் தென்கிழக்கு ஆசிய ஒத்துழைப்பிற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டது. 1994 இல் தாய்லாந்தில் தொடங்கப்பட்ட இம்மன்றம் ஆசியபசுபிக் பிராந்தியத்தின் பொதுவான அக்கறை கொண்ட அரசியல் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளில் ஆக்கபூர்வமான உரையாடலை வளர்க்க முற்படுகிறது.

இராஜாங்க அமைச்சர் பாலசூரிய தனது விஜயத்தின் போது ஆசியான் பிராந்திய மன்ற அங்கத்துவம் வகிக்கும் பிரதிநிதிகளான பல தலைவர்களுடன் இரு தரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

இலங்கை ஆசியான் மற்றும் கிழக்காசிய நாடுகளுடன் நீண்டகால வரலாற்று உறவுகளை பேணி வருகிறது. இராஜாங்க அமைச்சரின் இரு தரப்பு கலந்துரையாடல்கள், இரு தரப்பு ஈடுபாடுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகளை ஆராயவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டமூலங்கள் வாக்கெடுப்பின்றி திருத்தங்களுடன் நிறைவேற்றம்

அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார நிலை மாற்றம் ஆகிய இரு சட்டமூலங்களும் நேற்று பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

மேற்படி சட்டமூலங்கள் மீதான விவாதம் முழுநாள் விவாதமாக சபையில் முன்னெடுக்கப்பட்டதுடன் விவாதத்தின் முடிவில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

அரச நிதி முகாமைத்துவம் சட்ட மூலத்துக்கு எதிர்க்கட்சியினர் ஆதரவளித்ததுடன் பொருளாதார நிலை மாற்றம் சட்டமூலத்துக்கு ஆதரவளித்த போதும் அதன் சில சரத்துக்களுக்கு எதிர்ப்பை தெரிவித்து வந்தனர். அவ்வாறான நிலையில் மாலை 5.30 மணி வரை விவாதம் இடம்பெற்று இறுதியில் சட்டமூலத்துக்கு சபையின் அனுமதியை சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் கோரினார்.

இதன்போது எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல, அரச நிதி முகாமைத்துவம் சட்டமூலத்தை நாம் ஆதரிக்கிறோம். ஆனால் பொருளாதார நிலை மாற்றம் சட்டமூலத்துக்கு எமது எதிர்ப்பினை பதிவிடுகிறோம் என தெரிவித்தார். அதன்படி மேற்படி இரண்டு சட்டமூலங்களும் திருத்தங்களுடன் சபையில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டதாக பிரதி சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

### ‘உருமய’ அரசியல் வேலைத்திட்டமல்ல

# தேர்தல் காலங்களிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்

**காணி அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரன**

முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரம் வழங்கும் ‘உருமய’ திட்டம் அரசியல் வேலைத்திட்டமல்ல. எனவே தேர்தல் காலங்களிலும் இத்திட்டம் தொடர்ந்தும் செயற்படுமெனவும் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரன தெரிவித்தார்.

‘உருமய’ வேலைத்திட்டத்தின் கீழ் 20 இலட்சம் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் பணிகளை இரண்டு வருடங்களுக்குள் பூர்த்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்' என்ற தொனிப் பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் (25) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே சுற்றுலாத் துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரன இதனைக் குறிப்பிட்டார்.



இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரன,

"இந்த இரண்டு வருட காலப்பகுதியில் இலங்கை மக்களுக்கான மிக முக்கியமான வேலைத்திட்டமான ‘உருமய’ காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் எமது அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் இரண்டு ஆண்டுகளில் 20 இலட்சம் காணி உறுதிப்பத்திரங்களை வழங்க எதிர்பார்த்துள்ளோம். இதுவரை 100,000இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

‘உருமய’ வேலைத் திட்டம் என்பது பல கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படும் ஒரு தொடர்ச்சியான வேலைத்திட்டமாகும். அதன் முதற் கட்டமே தற்போது செயல்படுத்தப் பட்டு வருகிறது. இது ஒருபோதும் அரசியல் வேலைத்திட்டம் அல்ல. தேர்தல் காலங்களில் கூட இந்த காணி உறுதிகள் வழங்கப்படும். ஆனால் அதற்கு அரசியல் தலையீடு இருக்காது.

பிரதேச செயலாளரின் ஊடாக வழங்கப்படும் ஏனைய சேவைகளை போன்று இந்த காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கப்படுகின்றன. எனவே, தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பது, இந்த திட்டத்தை நிறுத்துவதற்கு ஒரு காரணமாக இருக்காது. இந்த திட்டம் எந்த தேர்தல் சட்டத்தையும் மீறாது.

ஏனெனில், இந்த காணி உறுதிகள் தேர்தல் காலத்தில் பொது மேடைகளிலோ அல்லது அரசியல்வாதிகளின் பங்களிப்புடனோ வழங்கப்படுவதில்லை. காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் செயல்முறையை மேலும் திறம்பட செய்வதற்கு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு ஊக்கத் தொகைகளும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### ஜனாதிபதி ஊடகப் பிரிவு

## பியசேன திஸாநாயக்கவின் மாமியார் காலமானார்

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் (ஊடக ஆசிரியர் குழாம்) பியசேன திஸாநாயக்கவின் மாமி, சீதா ஐரங்கனி தம்மிகா பெரேரா தனது 75 ஆவது வயதில் காலமானார்.



கலால் திணைக்களத்தின் ஓய்வு பெற்ற ஆர். டி. ஆர்தர் பெரேராவின் மனைவியான திருமதி சீதா ஐரங்கனி, பதுளை விஹார மகாதேவி வித்தியாலய அதிபர் மாலா சரோஜனி பெரேரா, ஜனாதிபதி அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தர் நிருபமாலி பவித்ரா திஸாநாயக்க, பதுளை விஹார மகாதேவி வித்தியாலய முகாமைத்துவ சேவை அதிகாரி கிருஷாந்தி தீபிகா பெரேரா மற்றும் ஆங்கில ஆசிரியை தரங்கா தீபாஞ்சலி பெரேரா ஆகியோரின் அன்பு தாயாருமானவர்.

இறுதிக்கிரியைகள் கடந்த 25 மாலை 7.00 மணியளவில் பதுளை பொது மயானத்தில் நடைபெற்றது.

## 'தமிழி' தமிழியல் ஆய்வகம்

‘தமிழி’ தமிழியல் ஆய்வகம் ‘உலக மயமாதல், பொருளாதார நெருக்கடி, அரசியல்’ எனும் தலைப்பிலான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் நடைபெறும்.

சமூக ஆய்வாளர் தெட்சணாமூர்த்தி மதுசூதனனின் நெறியாள்கையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடல்

06

## எத்தனை தடைகள் வந்தாலும் யுக்திய நடவடிக்கை தொடரும்

**அதனை நிறுத்தவே சிலர் இன்னமும் முயற்சி**



போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட 'யுக்திய’ அதிரடி சுற்றிளைப்பு நடவடிக்கைகள் எவ்விதமான தடைகள் வந்தாலும் நிறுத்தப்பட மாட்டாதென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

யுக்திய நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரர்களை காப்பாற்றவும் கைது செய்வதை தடுக்கவும் பலர் முயற்சித்ததாகவும் பொலிஸ் மாஅதிபர் ஒருவர் பதவியில் இல்லாவிட்டாலும் யுக்திய நிறுத்தப்படாதென்றும் அமைச்சர் டிரான் அலஸ் வலியுறுத்தினார்.

# போராட்டங்களை கைவிட்டு தொழிலுக்கு செல்லுங்கள்

**தொழிலாளருக்கு அமைச்சர் ஜீவன் அழைப்பு**



*பொகவந்தலாவ நிருபர்*

வேலைநிறுத்த போராட்டம் காரணமாக தங்களுடைய தொழில் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் அனைவரும் போராட்டங்களை கைவிட்டு வேலைக்கு செல்லுமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

பெருந்தோட்ட கம்பனி ஒன்றின் கீழ் இயங்கும் நானுஓயா உட ரதல்ல தோட்டத்தில் கடந்த மே மாதம் தேயிலை காணியில் கோப்பி பயிரிடப்பட்டதை எதிர்த்து தோட்ட முகாமையாளரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட மூன்று தலைவர்களையும் தோட்ட நிர்வாகம் பதவி நீக்கம் செய்தது.

இவ்விடயம் எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து உடனடியாக நான் களத்துக்கு சென்று நடவடிக்கைகளை மேற்கொண்டதனால் குறிப்பிட்ட தோட்ட முகாமையாளரினால் எனக்கெதிராக வழக்கு தொடரப்பட்டதன் காரணமாக சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இச்சம்பவம் தொடர்பாக கேள்வியுற்று அனைத்து பொதுமக்கள் சார்பாகவும் குறிப்பிட்ட பெருந்தோட்டக் கம்பனிக்கு எதிராக தொடர்ச்சியாக அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டு வருகின்றீர்கள்.

வேலைநிறுத்த போராட்டம் காரணமாக தங்களுடைய தொழில் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் அனைவரும் போராட்டங்களை கைவிட்டு (26) தொழிலுக்கு செல்லுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இதுவரை காலமும் போராட்டங்களை மேற்கொண்ட அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, உட ரதலை தோட்டத்தை நிர்வகிக்கும் பெருந்தோட்ட கம்பனியின் செயற்பாடுகளுக்கு எதிராக நாங்கள் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோமெனவும் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

### குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின்

# வவுனியா பிராந்திய அலுவலகம் புதிய கட்டடத்துக்கு இடமாற்றம்

**ஓகஸ்ட் 03 முதல் 15 வரை சேவைகள் நிறுத்தம்**

*வவுனியா விசேட நிருபர்*



குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா, வெளிச்சுற்று வீதியிலமைந்துள்ள பிராந்திய அலுவலகம், ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி முதல் காமினி மகா வித்தியாலயத்துக்கு முன்னால் மன்னார் வீதி, வவுனியா எனும் முகவரியிலுள்ள கட்டடத்தில் இயங்கவுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. வவுனியா, வெளிச்சுற்று வீதியில் தற்போது இயங்கிவரும் பிராந்திய அலுவலகத்தின் உத்தியோகபூர்வ கடமைகள் ஓகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைகிறது.

அதன்படி, ஓகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வரை திணைக்களத்தின் வவுனியா பிராந்திய அலுவலக சேவைகள் நடத்தப்பட மாட்டாது.

புதிய கட்டடத்தில் நிறுவப்படும் புதிய பிராந்திய அலுவலகத்தின் மூலம் ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி முதல் மீண்டும் பொதுமக்களுக்கான சேவைகள் வழங்கப்படுமென குடிவரவு – குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கற்பிட்டியில் வீடொன்றிலிருந்து பெருந்தொகை மஞ்சள் மீட்பு

*கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்*

கற்பிட்டி பள்ளிவாசல்துறை பகுதியில் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டு வீடொன்றில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகை மஞ்சள் நேற்று முன்தினம் (25) கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கற்பிட்டி பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரும் 35 இற்கும் 42 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் இவர்கள் பள்ளிவாசல்துறை மற்றும் குறிஞ்சிப்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் கூறினர்.



கற்பிட்டி பொலிஸ் விசேட பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் பள்ளிவாசல்துறை கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட வெள்ளங்கரை பிரதேசத்தில் கற்பிட்டி பொலிஸாருடன் இணைந்து பொலிஸ் விசேட பிரிவு உத்தியோகத்தர்கள் விசேட சோதனை மேற்கொண்டனர். இதன்போது, 20 மூடைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 860 கிலோ 250 கிராம் மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு கைப்பற்றப்பட்ட மஞ்சளின் பெறுமதி சுமார் 17 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையது எனவும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட ஐவரும் நேற்று (26) புத்தளம் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது, சந்தேக நபர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## புதிய கடவுச்சீட்டு விநியோகம் வரையறுக்கப்படுவதாக அறிவிப்பு




கடவுச்சீட்டுகள் விநியோகம் வரையறுக்கப்பட உள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடவுச்சீட்டுகளுக்காக பயன்படுத்தப்படும் பாஸ் புத்தகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாலேயே கடவுச்சீட்டு விநியோகம் வரையறுக்கப்படுவதாகவும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக நாளொன்றுக்கு சுமார் 400 வரையான கடவுச்சீட்டுகளை மட்டும் விநியோகம் செய்ய தீர்மானித்துள்ளதாகவும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்திடம் தற்பொழுது கையிருப்பில் 40,000 கடவுச்சீட்டு பாஸ் புத்தகங்களே காணப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலத்திரனியல் கடவுச்சீட்டு விநியோகம் இந்த ஆண்டு முதல் அறிமுகம் செய்யப்படவுள்ளதால், புதிதாக கடவுச்சீட்டு புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட மாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதியின் பின்னர் இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கப்படவுள்ளதால் தற்பொழுது கடவுச்சீட்டுகளை விநியோகம் செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வழமையாக ஒரு நாள் சேவையில் 1,200 கடவுச்சீட்டுகள் வழங்கப்படும். ஆனால் தற்பொழுது அவ்வாறு வழங்கப்படுவதில்லை. குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் ஊடாக முன்பதிவு செய்து கொண்டவர்களுக்கு மட்டுமே கடவுச்சீட்டுகள் வழங்கப்படவுள்ளன.

இதனால் வழமையான நடைமுறைகளில் கடவுச்சீட்டு பெற்றுக் கொள்வோர் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஓரின சேர்க்கை சட்டவாக்கத்தை மீள் பரிசீலிக்க வேண்டுகோள்

**சர்வமத தலைவர்கள்**



ஓரினச் சேர்க்கை சட்டவாக்கத்திற்கு தேசிய ஒற்றுமைக்கான சர்வ மத கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொரளையில் அமைந்துள்ள Bishop தலைமை காரியாலயத்தில் வணக்கத்திற்குரிய களனி வஜ்ர தேரரின் தலைமையில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இதற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் வணக்கத்திற்குரிய சோமரத்தின தேரர், வணக்கத்திற்குரிய ஜீனானந்த தேரர், கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, கலாநிதி அல் செய்க் ஹசன் மௌலானா ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

மேலும் சமூக சீரழிவுக்கு வழிவகுக்கும் ஓரினச் சேர்க்கை சட்டம் நாகரீக சமூகத்தை சீரழிக்கின்றது என்ற வகையில் இதனை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## கிராண்ட்பாஸ் துப்பாக்கி சூட்டில் ஆண், பெண் இருவரும் மரணம்




கொழும்பு, கிராண்ட்பாஸ், வதுல்லாவத்தை புரதர செவன அடுக்குமாடி குடியிருப்புக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த பெண் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இந்தப் பெண்ணையும் ஆண் ஒருவரையும் இலக்கு வைத்து துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது.

இச்சம்பவத்தில் 32 வயதான கே.ஜி.ஆர். தர்ஷன் என்ற நபர் நேற்று முன்தினம் இரவே உயிரிழந்துள்ளார். ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

அடுக்குமாடி குடியிருப்புக்கு முன்பாக முச்சக்கரவண்டியிலிருந்த இவர்கள் இருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இருவரும் நேற்று முன்தினம் மாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சில நிமிடங்களிலேயே ஆண் உயிரிழந்ததுடன், நேற்று அதிகாலை பெண் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் 56 வயதுடைய ஒருகொடவத்தை பிரதேசத்தை சேர்ந்தவரென்றும் சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 11ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 20


### குறள் தரும் சிந்தனை



நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்

விளைந்த பயிரைப் பார்த்தாலே இது எந்த நிலத்தில் விளைந்தது என்று அறிந்து கொள்ளலாம். அதேபோல் ஒருவரின் வாய்ச் சொல்லைக் கேட்டே அவர் எத்தகைய குடியில் பிறந்தவர் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

# நாட்டை மீளக்கட்டியெழுப்புவதில் அனைவரும் ஒத்துழைப்பது அவசியம்

பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகியிருந்த எமது நாடு தற்போது படிப்படியாக மீண்டெழுந்து வருகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் சாதுரியமான திட்டங்களே அதற்கான காரணங்களாகும்.

நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுந்து வருவதன் காரணமாக எரிவாயு, பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. மின்சாரக் கட்டணமும் குறைக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் மக்களின் சுமைகள் படிப்படியாகக் குறைக்கப்படுமென்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு விரைவாகவும் வேகமாகவும் மீட்சி பெற்றுவருவதன் அறிகுறிகள் நன்றாகவே தெரிகின்றன.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளத் தொடங்கியது.

அந்நிய செலாவணி பற்றாக்குறையோடு நாட்டில் பொருளாதார நெருக்கடி ஆரம்பமானது. இந்நெருக்கடி காரணமாக எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களையும் பெற்றுக் கொள்வதில் மக்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர். எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்காக நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நிலைக்கு மக்கள் உள்ளாகினர். இதன் விளைவாக வேளாவேளைக்கு உணவை சமைத்துக் கொள்வதற்குக்கூட மக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். குறிப்பாக நகர்ப்புற மக்களை சமையல் எரிவாயு பற்றாக்குறை பெரிதும் பாதிக்கக்கூடியதாக இருந்தது.

வாகனங்களுக்கான எரிபொருட்களுக்கும் பற்றாக்குறை நிலவியது. எரிபொருள் கப்பலை எதிர்பார்த்து மக்கள் ஏக்கத்துடன் காத்திருக்க வேண்டிய நிலைமை அக்காலத்தில் நிலவியது. அன்றாட தொழில்கள் ஸ்தம்பிதமடைந்ததால் ஏராளமான குடும்பங்கள் அன்றாட உணவுக்கே அல்லல்பட வேண்டிய அவல நிலைமை அன்று நிலவியது.

இவ்வாறான நெருக்கடிகள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெற்றுக் கொண்டிருந்த சூழலிலேயே 2022 ஆம் ஆண்டின் ஜூலை மாத பிற்பகுதியில் நாட்டின் தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார்.

நாடும் மக்களும் பொருளாதார ரீதியில் இக்கட்டான நிலைக்கு உள்ளாகி இருந்த சூழலில் இப்பதவியை ஏற்ற ஜனாதிபதி, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கு முன்னுரிமை அளித்து வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் இன்று சிறந்த பலனைத் தந்துள்ளன.

அதேநேரம் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் ஜனாதிபதி ஆரம்பித்த வேலைத்திட்டங்கள் அளித்துவரும் பிரதிபலன்களின் பயன்களை நாட்டு மக்களுக்கு பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி பதவியேற்றது முதல் இற்றைவரை முன்னெடுத்து வரும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் நாட்டுக்கு பல்வேறு பொருளாதாரப் பிரதிபலன்களை அளித்து வருகின்றன. நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்காக ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு சிறந்த பிரதிபலன்கள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

நிலைமை இவ்வாறிருக்கையில், அரசாங்கத்தின் திட்டங்களை எதிரணியினர் தவறாக விமர்சித்து வருவதுடன், மக்கள் மத்தியில் உண்மைக்குப் புறம்பான தகவல்களையும் விதைத்து வருகின்றனர். சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டுமென்று அன்றைய வேளையில் கூறிய எதிரணியினர், தற்போது சர்வதேச நாணய நிதியத்தை நாடியது தவறென்று கூறுகின்றனர். அதுமாத்திரமன்றி தாங்கள் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கப் போவதாகவும் மக்கள் மத்தியில் கூறி வருகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்கள் நினைத்தவாறு மாற்றப்படவோ அல்லது புதுப்பிக்கப்படவோ கூடியதல்ல. அந்த ஒப்பந்தங்கள் சர்வதேச நாணய நிதியத்துக்கும் நாடு ஒன்றுக்கும் இடையிலானவை ஆகும். அவை மாற்றப்படக் கூடியவையல்ல.

நிலைமை இவ்வாறிருக்கையில், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்பாக மக்கள் மத்தியில் தவறான தகவல்களை எதிரணியினரில் சிலர் விதைத்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. அதாவது மக்களை விவேகமற்றவர்கள் என்று எதிரணியில் சிலர் கருதுவதாகத் தெரிகின்றது.

அரசியல் ஆதாயத்துக்காக எவ்விதமான தவறான தகவல்களையும் மக்கள் மத்தியில் தெரிவிக்கலாமென்று எதிரணியினர் நினைப்பது தவறாகும். அரசியலுக்காக தவறுகளை இழைத்தல் ஆகாது. நாட்டின் எதிர்காலம் பற்றி அரசியல்வாதிகள் நேர்மையுடன் செயற்படுவது அவசியம். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுவரும் நாட்டை வலுவான தேசமாகக் கட்டியெழுப்புவதற்கு அனைத்துத் தரப்பினரும் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் அரசுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அதுவே நாட்டின் சுபிட்சமான எதிர்காலத்துக்கு அவசியமாகும்.

editor.tkn@lakehouse.lk

# யுனெஸ்கோ உலக மரபுரிமை சபையின் 46 ஆவது அமர்வு

## இந்தியா நடத்தியது; பிரதான அம்சமாக பூகோள ரீதியான மரபுரிமை உரையாடல்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஞாயிற்றுக்கிழமை உலக மரபுரிமை சபையின் 46 ஆவது அமர்வை ஆரம்பித்து வைத்தார், இது ஒரு வரலாற்றுத் தருணத்தைக் குறிக்கிறது. புதுடில்லியில் உள்ள பாரத மண்டபத்தில் குரு பூர்ணிமா அன்று மங்களகரமாகத் தொடங்கிய இந்நிகழ்வு, 2024 ஜூலை 21 முதல் 31 வரை நடைபெறும். இது இந்தியாவின் ஆழமான கலாசார வேர்கள் மற்றும் உலகளாவிய மரபுகளின் பாதுகாப்பிற்கான உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.



கூட்டத்தினரிடையே உரையாற்றிய இந்தியப் பிரதமர் மோடி, சர்வதேச பிரமுகர்களுக்கு அன்பான வரவேற்பு அளித்ததுடன், இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். இந்தியாவின் வளமான கலாசார பாரம்பரியத்தை வலியுறுத்திய அவர், "இந்தியா மிகவும் பைழமையானது, இங்குள்ள நிகழ்காலத்தின் ஒவ்வொரு புள்ளியும் சில புகழ்பெற்ற கடந்த காலத்தின் கதையைச் சொல்கிறது" என்று கூறினார். இந்த உணர்வு அவரது உரை முழுவதும் எதிரொலித்தது, இந்திய மண்ணில் வரலாறு மற்றும் நவீனத்துவம் பின்னிப்பிணைந்திருப்பதை வலியுறுத்தியது.

350 இற்கும் மேற்பட்ட பழங்கால கலைப்பொருட்கள் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருப்பது சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் வரலாற்றை மதிப்பதற்கான சான்று என்று குறிப்பிட்ட பிரதமர், உலகளாவிய பாரம்பரிய பாதுகாப்பில் இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். வடகிழக்கு இந்தியாவின் மைதாம் யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய பட்டியலில் இடம் பெற்றிருப்பது குறித்து பெருமிதம் தெரிவித்த அவர், அதன் கலாசார தனித்துவம் மற்றும் வரலாற்று முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

"இந்தியாவின் பாரம்பரியம் என்பது வெறும் வரலாறு அல்ல. இந்தியாவின் பாரம்பரியமும் ஒரு அறிவியல்" என்று பிரதமர் மோடி தனது உரையின் போது வலியுறுத்தினார், இந்த அறிக்கை இந்தியாவின் ஆழமான கலாசார மரபை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, பல்வேறு அறிவியல் துறைகளில் அதன் பண்டைய முன்னேற்றங்களை எடுத்துக் காட்டுகிறது.

உலோகவியல் மற்றும் கட்டடக் கலையில் இந்தியாவின் பண்டைய சாதனைகளை எடுத்துரைத்த அவர், டெல்லியில் 2000 ஆண்டுகள் பழமையான துருப்பிடிக்காத இரும்புத் தூண் மற்றும் 8 ஆம் நூற்றாண்டின் கேதார்நாத் கோயிலின் இருப்பிடம் முன்வைக்கும் பொறியியல் சவால்கள் போன்ற உதாரணங்களை மேற்கோள் காட்டினார். இந்த உதாரணங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தியாவின் நீடித்த வலிமையை வெளிப்படுத்தியதுடன், அதன் கலாசார பாரம்பரியத்தில் பொதிந்துள்ள அறிவியல் ஆழத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டின.





பாரம்பரிய பாதுகாப்புடன் வளர்ச்சிக்கான இந்தியாவின் பார்வையையும் அவர் கோடிட்டுக் காட்டினார், அதை 'விகாஸ் பி விராசத் பீ' என்ற சொற்றொடரில் இணைத்து, கலாசார மற்றும் பொருளாதார வளர்ச்சியை நோக்கிய முழுமையான அணுகுமுறையை வலியுறுத்தினார். காசி விஸ்வநாதர் வழித்தடம் மற்றும் நாளந்தா பல்கலைக்கழகத்தின் நவீன வளாகம் போன்ற சமீபத்திய முன்முயற்சிகளை அவர் சுட்டிக் காட்டினார்.

46 ஆவது உலக பாரம்பரியக் குழு கூட்டம், இந்தியாவின் கலாசார செழுமையை பறைசாற்றும் பல்வேறு அமைப்புகள் மற்றும் கண்காட்சிகளுடன் இணைந்து, உலக பாரம்பரியப் பாதுகாப்பில் புதிய அளவுகோல்களை நிர்ணயிக்கும் உறுதிமொழிகள் குறித்து விவாதித்தது. பாரம்பரியம் மற்றும் முன்னேற்றத்தை இந்தியா வழிசெலுத்துவதால், இந்த நிகழ்வு கலாசார இராஜதந்திரத்திற்கும், உலக அரங்கில் ஒத்துழைப்பிற்கும் கலங்கரை விளக்கமாக அமைகிறது.

மத்திய அமைச்சர்கள் மற்றும் யுனெஸ்கோ அதிகாரிகள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் இந்த நிகழ்ச்சியின் உலகளாவிய முக்கியத்துவத்தை குறிப்பிட்டுக் காட்டினர். உலகப் பாரம்பரியப் பாதுகாப்புக்கான எதிர்காலத்தை உருவாக்குவதில் இந்தியாவின் முக்கிய பங்கு பற்றியும் அவர்கள் பேசினர். 46வது உலக பாரம்பரியக் குழு கூட்டத்தை இந்தியா நடத்தியது, உலகளாவிய கலாசார நிர்வாகத்திற்கான தனது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியதுடன், மனித குலத்தின் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்பிற்கான மேடையை அமைக்கிறது.

# சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி வரவேற்புக் கோபுர நிர்மாணம் ஆரம்பம்

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸ் முயற்சியின் பயனாக ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் சம்மாந்துறை கல்வி வலய கமு/சது/சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) நிர்மாணிக்கப்படவுள்ள வரவேற்பு கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி அதிபர் எம்.ட. முஹம்மட் ஜனூபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு எச்.எம். முகம்மட் ஹரீஸ் எம்.பி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கேட்போர் கூடத்திற்கு அடிக்கல் நட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை வலயக்கல்வி பணிமனை நிர்வாக பிரதிக்கல்வி பணிப்பாளர் பி.எம்.வை. அரபாத் முகைதீன், சம்மாந்துறை மஜிலீஸ் அஸ்சூறா தலைவர் ஓய்வு பெற்ற சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி அஷ்ஷேக் எம்.ஐ. அமீர் (நளீமி), சம்மாந்துறை உலமா சபை தலைவர் மௌலவி எம்.எல்.எச்.பஷீர் (மதனி), திருகோணமலை மாவட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எம்.எம். மஹ்ரூப் பழைய மாணவர்கள் சங்கத்தின் செயலாளர் டொக்டர் ஏ.ஆர். நியாஸ் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர்.





**அஸ்ஹர் ஆதம்...**
(கல்முனை குறூப் நிருபர்)

# திறன் பலகையின் மேம்படுத்தப்பட்ட பயன்பாடு; சாவகச்சேரி இந்துவில் பயிற்சி

யாழ். மாவட்டத்தின் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில், ஆசிரியர்களுக்கான திறன் பலகையின் மேம்படுத்தப்பட்ட பயன்பாடு தொடர்பான பயிற்சியானது கடந்த 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் சிறப்பாக நடைபெற்றது. சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரட்ணம் பவுண்டேஷன் நிறுவனம், உலக மருத்துவ சுகாதார நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன், விசன்ஸ் குளோபல் எம்பவர்மன்ற் நிறுவனம் நடத்திய இப்பயிற்சியில், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 35 பேர் திறன்பலகையை கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளுக்கு வினைத்திறன் மற்றும் விளைதிறனான முறையில் பயன்படுத்துவது தொடர்பில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இரட்ணம் பவுண்டேஷன் நிறுவனத்தின் திறன் பலகை வழங்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஆசிரியர்கள் தமது பாடசாலைகளில் உள்ள திறன் பலகையினை அதிஉச்சமாகப் பயன்படுத்தி, நவீனத்துவமான கற்பித்தலை மாணவர்களுக்கு செயல்படுத்துவதற்கு உதவும் நோக்குடன் 10 பாடசாலைகளில் முன்மொழியப்பட்ட திறன் பலகையின் மேம்படுத்தப்பட்ட பயன்பாடு தொடர்பான முதல் பயிற்சியானது, சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.



கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் திறன் பலகையை பயன்படுத்தல், தேடு பொறி பயன்பாடு, ஆவணங்கள் மற்றும் காணொளிகளைப் பதிவிறக்கம் செய்தல், எளிமையான தட்டச்சு பயன்பாடு, கற்றல் மாதிரிகளை உருவாக்கல், காணொளிகளை உருவாக்கல், வினாத்தாள்களை உருவாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு கருவிகள் பயன்பாடு ஆகியவற்றில் செயல்பாட்டு வழிப் பயிற்சியாக இப்பயிற்சி நடைபெற்றது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபரின் ஒழுங்கமைப்பில், பங்கேற்ற அனைவருக்கும் தனித்தனி கணினியை இணைய வசதிகளுடன் பயன்படுத்தும் வசதிகள் முன்ஆயத்தத்தோடு செய்யப்பட்டு, பயிற்சி வழங்கப்பட்டது மிகச் சிறந்த முன்மாதிரியாகும்.

பயிற்சி பெற்ற 35 ஆசிரியர்களுக்கும், தொடர் பயிற்சிகள் வழங்கி, அவர்களை பயிற்றுனர்களாக உருமாற்றி சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஏனைய ஆசிரயர்களையும் பயிற்றுவிக்கும் செயல்திட்டம் அதிபர் தலைமையில் முன்மொழியப்பட்டமை சிறப்பம்சமாகும். இப்பயிற்சியானது, மிகுந்த பயனுடையதாக இருந்ததாகவும், மேலும் தமக்கு இவ்வாறான பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் எனவும் பயிலுனர்களால் வழங்கப்பட்ட பின்னூட்டலில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தப் பயிற்சியில், உலக மருத்துவ சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் ராதாகிருஷ்ணன், விசன்ஸ் நிறுவனத்தின் தலைவர் ந.தெய்வேந்திரராஜா மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி அ.மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிருசாந்தன், சிவசெல்வன் மற்றும் செந்தூரன் ஆகியோர் வளவாளர்களாக பயிற்சியினை முன்னெடுத்திருந்தனர்.

# சமூகத்தின் மாயவிம்பத்தை தகர்க்கும் விதமாக அமைந்துள்ள 'சேவகி' குறுந்திரைப்படம்

## வெளியீட்டுரையில் கவிஞர் கு. கிலசன்

பெண்களுடைய சமூக சேவையை இழிவுபடுத்தக்கூடிய விதமாக சமூக வலைத்தளங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற போலியாக பரப்பிவிடுகின்ற அவதூறுகளுக்கு முகம்கொடுக்கும் பெண்கள் மனதளவில் எதிர்நோக்கும் வலிகள், பிரச்சினைகள் அதிகம்.பெண்கள் மீதான சமூகத்தினதும், சமூக வலைத்தளங்களினதும் மாயவிம்பத்தை உடைத்தெறியக்கூடிய விதமாக 'சேவகி' குறுந்திரைப்படம் அமைந்துள்ளது என கவிஞர் பல்துறைக்கலைஞர் குலசிங்கம் கிலசன் தெரிவித்தார்.

அகரம் கலைக்கழகத்தின் வெளியீடாக சேவகி எனும் குறுந்திரைப்படம் மட்டக்களப்பு மண்முனைப்பற்று புதுக்குடியிருப்பு அகரம் பாலர் பாடசாலையின் ஏற்பாட்டில் அகரம் செ.துஜியந்தன் தலைமையில் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் பரமேஸ்வரன், புதுக்குடியிருப்பு கிராமத்தின் கிராம உத்தியோகத்தர் திருமதி தயனி கிருஷ்ணாகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். அகரம் செ.துஜியந்தன் இயக்கத்தில் புதுக்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் திருமதி தயனி கிருஷ்ணாகரன் மற்றும் த.முரளிதரன், த.மேனுஜன் ஆகியோரின் நடிப்பில் சேவகி குறுந்திரைப்படம் வெளியவந்துள்ளது.

இங்கு வெளியீட்டுரை நிகழ்த்திய பல்துறைக்கலைஞர் கு.கிலசன் மேலும் தெரிவிக்கையில்,

பலருடைய மனங்களில் மாற்றங்களை விதைக்க வேண்டிய குறுந்திரைப்படமாக சேவகி வெளிவந்துள்ளது. சமூக சேவை என்பது வெறுமனே புகைப்படங்களுக்காகவோ, புகழுக்காகவோ செய்யப்படுகின்ற சேவையல்ல. தாழ்ந்துகிடக்கும் உறவுகளை கை தூக்கி நிறுத்தக்கூடிய விதமாகவும் எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி உண்மையான சேவைகள் இருக்கவேண்டும். சமூகத்தின்





அவலங்களை களையும் வகையில் உண்மையான சேவைகளைச் செய்கின்ற உறவுகளுக்கு அனைவரும் பக்கபலமாகவும், உறுதியாகவும் இருக்கவேண்டும் என்பதை சேவகி குறுந்திரைப்படம் மிகச் சிறப்பாக சொல்கின்றது.

சமூக சேவை செய்கின்ற ஆண்களுக்கே ஆயிரம் பிரச்சினைகள் வருகின்றபோது ஒரு பெண் சமூக சேவை செய்தால் எத்தனை பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவேண்டி வரும். சேவகி குறுந்திரைப்படம் தற்காலத்தில் அவசியமான ஒரு கருத்தினை சொல்லக்கூடிய விதமாக அமைந்துள்ளது.

ஒவ்வொருவருடைய மனதிலும் சேவை செய்யவேண்டும் என்ற மனப்பாங்கு இருப்பது வழமையாகும். ஆனால் தற்காலத்தில் இருக்கக்கூடிய இப் பொருளாதாரக் கஸ்டம், வாழ்க்கையின் ஓட்டம், தொழில்நுட்பமாற்றங்கள் இப்படி தலைசுற்றும் வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கையில் எமக்கு நாமே தனித்துவமாகவும், சுயநலத்தோடும் இயங்க வேண்டியவர்களாக மனதை மாற்றிக்கொண்டிருக்கின்றோம். ஒரு சிலர் மட்டும் தங்களுடைய மனநிலையில் மாற்றம் இல்லாமல் எப்போதும் சமூக சேவையை மனதில் கொண்டு ஓடியவர்களாக இருக்கின்றார்கள். நாம் ஏதாவது சமூக சேவை ஆற்றுவதற்கு வெளியில் செல்கின்றபோது எந்தவொரு எதிர்பார்ப்பையும் மனதில் கொண்டிருப்பதில்லை. இச்சேவை உரியவர்களுக்கு சரியாக செல்லவேண்டும் என்ற எண்ணம் மட்டுமே மனதில் இருக்கும்.

சேவையின் ஊடாக பிரதிபலன் கிடைக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்காது. அப்படியிருந்தும் சேவை செய்துவிட்டு வீடு வருவதற்குள் எமது சேவை தொடர்பான விமர்சனங்கள் விரைவாக வீட்டுக்கு வந்துவிடும். இதுதான் தற்காலத்தில் இருக்கும் விமர்சனமாகும். சேவை செய்பவர்களையும் விடமாட்டார்கள் அவர்களும் சேவை செய்யமாட்டார்கள். வைக்கோல் பட்டறை நாய் போல் இருப்பார்கள்.

சிலர் எதிர்மறையான விமர்சனங்களைக் கண்டு சமூக சேவையை விட்டு விலகிவிடுவார்கள். ஆண்களைவிட பெண்கள் சமூகசேவையில் ஈடுபட்டால் என்ன நடக்கும் என்பதை நினைத்துப்பார்க்க முடியாதளவிற்கு இருக்கும்.

இச் சேவகி குறுந்திரைப்படத்தில் வரும் மனையிவின் கதாபாத்திரம் சேவை செய்யும் மனப்பாங்கை கொண்டுள்ளது.

இவ்வளவு பெரிய கதையை ஒரு மூன்று நிமிடங்களுக்குள் சுருக்கமாக இயக்குநகர் அகரம் செ.துஜியந்தன் சொல்லியவிதம் சிறப்பாக அமைந்துள்ளது. இதில் மனைவி வேடத்தில் நடித்துள்ள நடிகை தயனி கிருஷ்ணாகரன் தனது கதாபாத்திரத்தை அருமையாக செய்துள்ளார். அத்துடன் இதில் வரும் ஏனைய பாத்திரங்களும் தங்களது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியுள்ளனர். சமூக சேவை செய்பவர்களுக்கு தங்களுடைய வீடுகளிலுள்ளவர்கள் அவர்களது சேவையை மதித்து பக்கபலமாக இருந்தால் அவர்களது சேவையும் போற்றப்படும். பலரது வாழ்க்கையும் உயரும் என்பதை சேவகி குறுந்திரைப்படம் கல்லில் அறைந்தால் போல் சொல்லியுள்ளது.

இவ்வாறு கவிஞர் கு.கிலசன் தெரிவித்தார்.

**(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)...**

# இந்திய இடைத்தேர்தலில் இந்திய கூட்டணியின் எழுச்சி!

## பா.ஜ.க.வுக்கு தொடர் வீழ்ச்சி

இந்தியாவின் பெரும் பணக்காரர்களில் ஒருவரான அம்பானியின் மகன் ஆனந்த் அம்பானி - ராதிகா மெர்ச்சன்ட் திருமணக் கொண்டாட்டத்தில் இந்தியாவில் 7 மாநிலங்களில் 13 தொகுதிகளில் நடைபெற்ற இடைத்தேர்தல் பற்றி அதிகமாக பெறப்படாமலே கடத்தப்பட்டிருக்கிறது. 7 மாநிலங்களில் நடந்த 13 தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி 10 இடங்களை வென்றுள்ளது. பா.ஜ.க கூட்டணி இரண்டு இடங்களிலும் சுயேச்சை ஒரு இடத்திலும் வெற்றி பெற்றிருக்கின்றன.

இடைத்தேர்தலைப் பொறுத்தவரையில் ஆளுங்கட்சியாக இருப்பவர்களே அதிகம் வெற்றி பெறுபவர்களாக இருப்பதுதான் வரலாறாக இருந்துள்ளது. தற்போது நடந்திருக்கும் இடைத்தேர்தலில் எதிர்க்கட்சியாக இருக்கும் இந்தியா கூட்டணியே அதிக இடங்களை வென்றிருப்பது ஆச்சரியத்தை தருவதோடு, பா.ஜ.க கூட்டணி மீதான மக்களின் வெறுப்பு இன்னும் இருக்கிறது என்பதையே காட்டுகிறது.

இந்தத் தேர்தல் முடிவு நாட்டில் மாறிவரும் அரசியல் சூழலை பிரதிபலிப்பதாக காங்கிரஸ் கூறியுள்ளது.



தமிழ்நாட்டில் விக்ரவாண்டி, மேற்குவங்கம் (4 தொகுதிகள்,) இமாச்சல பிரதேசம் (3), உத்தரகாண்ட் ( 2), பஞ்சாப் (1), மத்திய பிரதேசம் (1) பீகார் (1), ஆகிய 7 மாநிலங்களில் 13 தொகுதிகளில் ஜூலை 10 ஆம் திகதி சட்டப் பேரவைக்கான இடைத்தேர்தல் நடைபெற்றது, இதில் காங்கிரஸ், திமுக, திரிமுணல் காங்கிரஸ், ஆம் ஆத்மி ஆகிய இந்தியா கூட்டணி கட்சிகள் பா.ஜ.கவை எதிர்த்துப் போட்டியிட்டன,

மக்களவை தேர்தல் முடிந்த நிலையில் நடக்கும் இடைத் தேர்தல் என்பதால் இதன் முடிவு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது, இத்தேர்தலில் பதிவான வாக்குகள் ஜூலை 14 ஆம் திகதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இதில் இந்தியா கூட்டணி 10 இடங்கங்களில் வென்று இந்திய அரசியலை திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

ஆளும் கட்சியாக இருக்கும் பா.ஜ.க நின்ற தொகுதிகளில் ஏன் அதிக இடங்களை இழந்துள்ளது என்பதும் வினாவாக இருக்கிறது.





தமிழ்நாட்டில் விக்ரவாண்டி தொகுதியில் நின்ற தி.மு.க வேட்பாளர் அன்னியூர்சிவா அதிக வாக்குகளைப் பெற்று சாதனை வெற்றி பெற்றுள்ளார்.

**நந்தவனம் சந்திரசேகரன்...**

# நித்தியானந்தா புதிதாக வெளியிடும் கைலாசா நாட்டு பரபரப்பு தகவல்கள்!

பல்வேறு வழக்குகளில் தொடர்புடைய, தன்னையே கடவுள் என்று அறிவித்துக் கொண்டுள்ள நித்யானந்தா வெகுகாலமாக பேசி வந்த கைலாசா என்ற தனது 'நாட்டைப்' பற்றிய புதிய தகவல்களை வெளியிட்டுள்ளார்.

பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு உள்ளிட்ட பல்வேறு வழக்குகளுக்காக பொலிஸாரால் தேடப்பட்டும் வரும் நபர் நித்தியானந்தா ஆவார்.

'கைலாசா' என்ற நாட்டை உருவாக்கியிருப்பதாக நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அறிவித்திருந்த நித்தியானந்தா, அது எங்கு உள்ளது, அந்த நாடு எப்படி இருக்கும் என்ற தகவல்களை வெளியிடாமல் இரகசியமாகவே வைத்திருந்தார்.

இணைய விவாதங்களில் கைலாசா எங்குள்ளது என்பது அவ்வப்போது பேசுபொருளாக இருந்து வந்துள்ளது. தற்போதும் கைலாசா எங்குள்ளது என்று தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. சில தகவல்களை அவ்வப்போது வெளியிட்டுள்ளார் நித்தியானந்தா.

இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகா, குஜராத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் பாலியல் தொந்தரவு வழக்கு, ஆட்கடத்தல் உள்ளிட்ட வழக்குகள் சிலவற்றில் விசாரிக்கப்பட்டு வந்தவர் நித்தியானந்தா.

2019 ஆம் ஆண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த தம்பதியினர் தங்களது இரு மகள்மாரை நித்தியானந்தா சட்டவிரோதமாக அடைத்து வைத்துள்ளார் என்று வழக்குத் தொடுத்திருந்தனர். 2010 ஆம் ஆண்டு பெங்களூரில் தொடுக்கப்பட்ட பாலியல் துன்புறுத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டார் நித்தியானந்தா. பிணையில் வெளிவந்த நித்தியானந்தா, 2019 ஆம் ஆண்டு முதல் அந்த வழக்கு தொடர்பான எந்த விசாரணைக்கும் நேரில் ஆஜராகவில்லை.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு காணாமல் போன அவர், 2020ஆம் ஆண்டில் திடீரென தாம் 'கைலாசா' என்ற நாட்டை உருவாக்கியுள்ளதாகவும், அங்கு இந்து சமயத்தைத் தழுவிய தேசத்தை உருவாக்கியிருப்பதாகவும் கூறி, அதற்கென ஒரு கொடி, நாணயம், ஆட்சி முறை போன்றவற்றை வெளியிட்டிருந்தார்.

அவரால் தேசம் என அழைத்துக் கொள்ளப்படும் கைலாசாவுக்கு சுற்றுலா விசாவை அறிமுகப்படுத்திய நித்தியானந்தா, அவுஸ்திரேலியாவுக்கு வந்தால் அங்கிருந்து கைலாசாவுக்கு அழைத்துச் சென்று 15 நாட்கள் ஆன்மிக அனுபவத்தைக் கொடுத்து பிறகு மீண்டும் அவுஸ்திரேலியாவிலேயே விட்டு விடுவோம் என்று கூறினார். தமது தேசத்தில் வந்து போகும்வரை அனைத்து செலவையும் தமது நிர்வாகமே ஏற்றுக் கொள்ளும் என்று கூறி ஒரு காணொளியை அவர் வெளியிட்டார்.

அவர் நாட்டை விட்டு தப்பியோடியதாகக் கூறப்படும் நிலையில், இப்போதும் தனது யூடியூப் உள்ளிட்ட சமூக வலைத்தளப் பக்கங்களில் காணொளிகளை வெளியிட்டு வருகிறார்.

கைலாசவாசியாக இருப்பதற்கு, இந்து வாழ்க்கை முறையை தேர்ந்தெடுக்கும் எவரும் தகுதியானவர் என்றும், இந்துவாக இருப்பதால் பாதிக்கப்பட்டவர், இயற்கை பேரிடர், காலநிலை மாற்றம் ஆகியவற்றால் இடம்பெயர்ந்தவர்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்சில் மூலம் அகதியாக பதிவு செய்து கைலாசாவுக்கு வரலாம் என்றும் நித்தியானந்தா சார்பில் கூறப்பட்டிருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் கைலாசா 'ஒரு பக்கம் கடலும், மறுபுறம் பனிமலையும் சூழ' அமைந்திருக்கும் நாடு என்று விபரித்திருந்தார்.

"கைலாசாவில் எனக்கென்று தனி அறை கிடையாது. பிரதான அரங்கில் எனது ஊஞ்சல் இருக்கும். நான் அங்கேயே தான் இருப்பேன். யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் என்னை சந்தித்து என்ன வேண்டுமானாலும் பேசலாம்" என்றும் அவர் பேசியிருந்தார்.

தற்போது, நித்தியானந்தாவின் யூடியூப் பக்கத்தில் வெளியிடப்படும் வீடியோக்கள் ஒன்றின் மூலம் புதிய தகவல்களை அவர் வெளியிட்டுள்ளார்.

கடலோரப் பகுதிகள், மலைப் பகுதிகள், தீவுப் பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு புவியியல் அம்சங்களை உள்ளடக்கிய, உலகம் முழுவதும் உள்ள இறையாண்மை கொண்ட மற்றும் தன்னாட்சி பிரதேசங்களில் 'கைலாசா' இருப்பதாக அதன் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.





## ஒரு பக்கம் கடலும், மறுபுறம் பனிமலையும் சூழ்ந்த அழகிய தேசம் என்று வர்ணிக்கிறார்

கைலாசா பல நாடுகளுடன் பரஸ்பர உறவுகளை ஏற்படுத்தியிருப்பதானது, சர்வதேச சமூகத்தில் அதன் அங்கீகாரத்தைக் குறிக்கிறது என்றும் கைலாசா இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைலாசா தற்போது 149 நாடுகளில் உள்ள 108 இற்கும் மேற்பட்ட ஐக்கிய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் இயங்கி வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைலாசாவில் ஏழு அமைப்புகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆண் சந்நியாசிகளுக்கான இருப்பிடம் இராமகிருஷ்ண மடத்தின் அடிப்படையிலும், பெண் சந்நியாசிகளின் இருப்பிடம் சாரதா மடத்தின் அடிப்படையிலும், திருமணமானவர்களுக்கு புதுச்சேரியில் உள்ள ஆரோவில் போன்ற இருப்பிடமும் அமைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்விக்கான குருகுலம், நித்தியானந்தா இந்து பல்கலைக்கழகம், தொழில் செய்வதற்கான இந்து உலக வர்த்தக மையம் அமைக்கப்படுவதாகவும், ஆன்மிக மற்றும் நிர்வாக மையமாக அமையும் மஹா கைலாசாவில் தான் வசிக்கப் போவதாகவும் நித்தியானந்தா குறிப்பிட்டுள்ளார்.

கைலாசாவில் உணவு, தங்குமிடம், உடை, மருத்துவம் உள்ளிட்ட அனைத்தும் இலவசம் என அறிவித்திருக்கும் நித்தியானந்தா, இராணுவமோ, பொலிஸ்துறையோ கைலாசத்தில் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கைலாசாவில் வரி விதிப்பு முறை இல்லை என்றும் இந்து வர்த்தக மையத்தின் மூலம் கிடைக்கும் வருமானமும், உலகம் முழுவதிலிருந்தும் கிடைக்கும் நன்கொடையும் கைலாசாவை நடத்த பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்காவில் உள்ள நியூ ஜெர்சியின் நெவார்க் நகரம் கைலாசாவுடன் கலாசார, சமூக பரிமாற்றங்களுக்கான ஒப்பந்தம் ஏற்படுத்தியமை பெரும் சர்ச்சையை எழுப்பியது. கைலாசா என்ற நாடு இருப்பதாகக் கூறி தங்களை ஏமாற்றி ஒப்பந்தம் போடப்பட்டதாக நெவார்க் நகர நிர்வாகம் பின்னர் தெளிவுபடுத்தியது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டு கூட்டங்களில் கைலாசா நாட்டின் பிரதிநிதிகள் என்று கூறி பங்கேற்றவர்களின் உரையை நீக்குவதாக ஐக்கிய நாடுகள் சபை முன்னதாகத் தெரிவித்திருந்தது.

ஒருவரிடம் நிறையப் பணம் இருந்தால், எந்த நாட்டிலாவது தீவுகளை விலைக்கு வாங்கலாம். அந்தத் தீவை ஒரு நாடாக அறிவிக்கலாம். ஆனால், தீவை விலைக்குக் கொடுக்கும் நாடும் சம்மதிக்க வேண்டும்.

பிற நாடுகள் அல்லது ஐக்கிய நாடுகள் சபை போன்றவை அதை அங்கீகரிக்கின்றனவா என்பதுதான் 'நாடு' என்ற அங்கீகாரம் பெறுவதில் முக்கியமான அம்சம். இவை இல்லாமல் பல 'நாடுகள்' உலகில் இருக்கின்றன.

சில நாடுகளில் மக்கள் தொகை கொண்ட பல சிறிய தீவு நாடுகள் உள்ளன. அந்த நாட்டு அரசுகள் சம்மதித்தால், பணம் கொடுத்து அவற்றைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம்.

நிலத்தில் கிடைக்கவில்லை என்றால் தண்ணீரில் கொடியை நட்டு ஒரு நாட்டை அமைக்கலாம். சர்வதேச கடல் பரப்பு எந்தவொரு நாட்டின் அதிகார வரம்புக்கும் உட்பட்டது அல்ல. எனவே, கடலில் ஒரு தீவை செயற்கையாக உருவாக்கி ஒரு நாடாக அறிவிக்கலாம்.

பிரிட்டனுக்கு அருகில் வடக்கு கடலில் உள்ள 'பிரின்சிபாலிட்டி ஒஃப் சீலாண்ட்' என்ற சுயஅறிவிக்கப்பட்ட நாடு உள்ளது. இது பிரிட்டனின் கடற்கரையில் இருந்து சுமார் 12கிமீ தொலைவில் உள்ளது. இரண்டாம் உலகப் போரின்போது நாஜி விமானத் தாக்குதல்களை எதிர்கொள்ள பிரிட்டன் விமான எதிர்ப்புத் தளங்களை உருவாக்கியது. அங்கு சுமார் 300 பிரிட்டிஷ் வீரர்கள் பணியாற்றினார்கள். 1956 இல் பிரிட்டன் அங்கிருந்து வெளியேறியது.

முன்னாள் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி ரோய் பேட்ஸ் 1967இல் எச்.எம் ஃபோர்ட் ரஃப்ஸை கோட்டையைக் கைப்பற்றினார். அதன்பிறகு அதை அவர் ஒரு தேசமாக அறிவித்தார். அவர் அதற்கு சீலாண்ட் என்று பெயரிட்டு தன்னை இளவரசர் என்று அழைத்துக் கொண்டார்.

மத்திய பிரதேச மாநிலம் இந்தூரை சேர்ந்த சுயாஸ் தீட்சித் என்பவர் 2017 ஆம் ஆண்டு ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கியதாக அறிவித்தார். எகிப்துக்கும் சூடானுக்கும் இடையே உள்ள பிர் தவில் என்ற இடத்தில் 'தீட்சித் ராஜ்ஜியம்' நிறுவப்பட்டதாக அவர் கூறினார்.

சுமார் 2,000 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்ட பிர் தவில் பகுதியில் எந்தவொரு நாட்டுக்கும் உரிமை இல்லை. அங்கு தனது இராச்சியத்தை நிறுவிய சுயாஸ் தன்னை அரசனாக அறிவித்தார்.



## சிக்கல்களுக்கு தீர்வு...

நீதிமன்றம் வழங்கியுள்ள தடையுத்தரவு சம்பந்தமாக பாராளுமன்றத்தில் நேற்று தெளிவுபடுத்தும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சபை முதல்வர் என்பவர் சபை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குபவர். அந்த செயற்பாடுகளையே நான் செய்கின்றேன். திகாரங்களை பகிர்ந்தளிப்பது தொடர்பில் நான் தெளிவுபடுத்தியுள்ளேன். எனினும் அரசியலமைப்பு பேரவையின் தலைவர் சபாநாயகரே. அரசியலமைப்பின் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஜனாதிபதி பெயர் குறித்து அனுப்புவாரானால் அதனை உறுதிப்படுத்துவது அரசியலமைப்பு பேரவையே. வழக்கொன்றின் தீர்ப்பு தொடர்பில் நாம் பேச முடியும். அதையும் எம்மால் செய்ய முடியாவிட்டால் நாம் சட்டத்தை கற்றுக் கொள்ளவும் முடியாது. கற்றுக் கொடுக்கவும் முடியாது. பொலிஸ் மாஅதிபரின் சேவை தொடர்பில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறானால் பொலிஸ் மாஅதிபர் பதவி வெற்றிடமாக உள்ளதா? அந்தப் பதவியை இடைநிறுத்துவதற்கு உயர் நீதிமன்றத்தினால் முடியும். அரசியலமைப்பின் 126 வது சரத்தின் படி அது சரி. சட்டத்தரணி என்ற வகையில் நானும் அதற்கு இணங்குகின்றேன். பதவியை வெற்றிடமாக்காமல் பதவி நிறுத்தப்பட்டே உள்ளது. பதவி ஒன்று வெற்றிடமாக இல்லாவிட்டால் அதற்கான பதில் நியமனம் வழங்குவது எவ்வாறு?

அவ்வாறென்றால் அரசியலமைப்பு பேரவை அந்த பிரச்சினையை மீண்டும் சபாநாயகருக்கு வழங்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன். அமைச்சர் ஒருவர் வெளிநாட்டுக்கு சென்றால் அவருக்கு பதிலாக பதில் அமைச்சர் நியமிக்கப்பட வேண்டும். அது தொடர்பில் அரசியலமைப்பில் எதுவும் கிடையாது.எனினும் இந்த நியமனம் தொடர்பில் அரசியலமைப்பில் 7(ஆ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது இந்த நாட்டின் முக்கியமான சட்டமாகும். அதனை ஒருபோதும் மீற முடியாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி தேர்தல் செப்டெம்பர்...

செய்ய முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு முன்னதாக அறிவித்திருந்தது.

## நாடு முழுவதும் பாதுகாப்பு...

அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் அனைத்து பாதுகாப்புத்துறை பிரதானிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழு கூட்டம் நேற்றைய தினம் பாராளுமன்றக் கட்டிடத்தில் நடைபெற்றதுடன் அதன் போதே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அனைத்து பாதுகாப்பு பிரதானிகளுக்கும் இந்த பணிப்புரையை வழங்கியுள்ளார்.

பாதுகாப்புப் படைகளின் ஆளணி பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா உள்ளிட்ட முப்படைகளின் உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்களினதும் பிரதானிகள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

அந்த வகையில் அரசியலமைப்பு மற்றும் நாட்டுப் பிரஜைகளின் அடிப்படை உரிமையை பாதுகாக்கும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் இதன் போது தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வருட காலமாக நாட்டில் நிலவிய நெருக்கடி நிலையின் போது கடுமையான பல தீர்மானங்களை மேற்கொள்ள நேர்ந்ததாகவும் அந்த காலங்களில் தேசிய பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கை பாதுகாத்து நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வர முடிந்துள்ளமை தொடர்பிலும் இராஜாங்க அமைச்சர் இதன் போது தெளிவுபடுத்தியுள்ளார். அந்த வகையில் அவ்வாறு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்களினதும் நடவடிக்கைகள் எதிர்காலத்திலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவன் கேட்டுக் கொண்டார்.

## சுயேட்சை வேட்பாளராக...

செலுத்தியுள்ளார். ஜனாதிபதியின் வழக்கறிஞர் றொனால்ட் சி. பெரேரா இந்த பணத்தை வைப்பீடு செய்துள்ளார். நேற்றுக்காலை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வந்த றொனால்ட் சி. பெரேரா இந்த கட்டுப் பணத்தை செலுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்திய முதலாவது வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார். ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேட்சை வேட்பாளராக போட்டியிடவுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று (26) காலை வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைவாக ஜனாதிபதி தேர்தல் தொடர்பான வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் ஓகஸ்ட் 15 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாண், பேக்கரி உற்பத்திகள்...

கோரிக்கைக்கமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேக்கரி பொருட்களின் விலை குறைப்பு தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை (19) பேக்கரி உரிமையாளர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலையடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சர் முன்னர் தெரிவித்திருந்தார்.

பேக்கரி பொருட்களின் விலைகளை முடிந்தவரை குறைக்குமாறு அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர், சங்க உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டார்.

## இலங்கை பொதுநலவாய...

தெரிவித்துள்ளார். தமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுத்து பூர்வமாக இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் மகாராணியின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்த நாடுகள் அதிலிருந்து விடுபட்ட பின்னர், அந்த நாடுகளை வேறொரு வழியில் அடிபணிய வைக்கவே பொதுநலவாய அமைப்பு நிறுவப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரித்தானிய மகாராணியின் ஆதிக்கம் இல்லாத பொதுநலவாய அமைப்பில் தான் தமது கட்சி அங்கம் வகிக்கிக்கும் எனவும், ஆனால் அவர் ஆதிக்கம் செலுத்தும் பொது நலவாய அமைப்பில் இருந்து இலங்கை விலகிக்கொள்ளும் என்பதை தமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கில் உற்பத்தி...

கொடுக்கும் நோக்கிலும் கொழும்பில் தரமான பழங்களை மலிவு விலையில் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கொழும்பில் உள்ள நுகர்வோர் பழ வகைகளுக்காக அதிக விலையை செலுத்த வேண்டியுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (26) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே வடமாகாண ஆளுநர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

வடமாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பழங்களை கொழும்புக்கு கொண்டு செல்வதில் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை போதிய போக்குவரத்து மற்றும் சேமிப்பு வசதியின்மையாகும். இதற்காக அதிகம் செலவிடவுள்ளது என்று குறிப்பிட்ட அவர், போக்குவரத்து அமைச்சுடன் இது குறித்து கலந்துரையாடவிருப்பதாகவும் கூறினார்.

இதற்காக விசேட நிதி ஒதுக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்ட வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்லஸ் இதன் மூலம் வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு புகையிரத நிலையங்களிலும் களஞ்சியசாலைகள் நவீனமயப்படுத்தப்பட்டு வடக்கின் பழங்களை கொழும்பிற்கு கொண்டு வருவதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

## நீதியான, சுதந்திரமான...

தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் விதத்தில் அவர்களை வலுப்படுத்தும் நீதியான சுதந்திரமான தேர்தலை எதிர்பார்க்கின்றோமென அவர் தெரிவித்துள்ளார்.

## இன்றைய பலன்கள்

### (27.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்** :
பொதுவாழ்வில் இருப்பவர்கள் நிதானமாக செயல்படுவது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்கள் கணக்கு வழக்குகளில் கவனமாக இருக்க வேண்டும்.

**ரிஷபம்** :
எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு போட்டிகளுக்கு மத்தியில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்** :
ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் ஆதரவு பெருகும்.

**கடகம்** :
வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களால் பிரச்சனைகள் வரலாம்.

**சிம்மம்** :
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு ஓய்வில்லாமல் உழைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கன்னி** :
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். வியாபாரம் தொழில் செய்பவர்கள் எதிர்பார்த்த இலக்கை அடைவர்.

**துலாம்** :
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பிறருக்கு பொறுப்புச் சொல்வதால் பிரச்சினைகள் வரலாம். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வேண்டிய முதலீடுகள் கிடைக்கும்.

**விருச்சிகம்** : பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முன்னேற்ற பாதையை நோக்கி அடியெடுத்த வைப்பர். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு கணிசமான தொகை கைகளில் புரளும்.

**தனுசு** :
வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு ஆலோசனை கைகொடுக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் மட்ட அதிகாரிகளால் நன்மை கிடைக்கும்.

**மகரம்** :
விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். தொழில் சீராக நடைபெறும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முக்கிய பிரமுகர்களின் சந்திப்பால் முன்னேற்றம் கிடைக்கும்.

**கும்பம்** :
பொழுது பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புது முயற்சிகளை யோசித்து செய்வது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு தொழில் போட்டி அதிகரிக்கும்.

**மீனம்** :
தன விரயம் அதிகரிக்கும். அதனால் பொது உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயிர் அதிகாரிகள் முக்கியத்துவம் கொடுப்பர்.

## IGP யின் பணி இடைநிறுத்த...

ஒரு வேட்பாளரென்ற வகையில் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கமைய பதில் பொலிஸ் மாஅதிபரை அவரால் நியமிக்க முடியாதென சபையில் குறிப்பிட்ட பிரதமர், உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்கால தடையுத்தரவில் எவ்வித சட்ட வலுவும் கிடையாதென்றும் பிரதமர் தெரிவித்தார். பொலிஸ் மாஅதிபர் நியமனம் தொடர்பில் உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ள இடைக்காலத் தடையுத்தரவு தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று விளக்கமளித்து உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர்,

பொலிஸ் மாஅதிபர் விவகாரம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெரிவிப்பது முக்கியமாகும். இந்த நாட்கள் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அதே போன்று அரச நிர்வாக முறைமைக்கும் தீர்மானமிக்கதாகும். பாராளுமன்றத்தின் உயரிய தன்மையை பாதுகாப்பதற்காக செயற்பட்ட பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. நாட்டின் பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள்,தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கும் பொலிஸ் மாஅதிபர் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளார். பொலிஸ் மாஅதிபர் தொடர்பாக இடைக்கால தடையுத்தரவை உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ளதுடன் அந்த தடையுத்தரவு தொடர்பான ஆட்சேபனையை எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி தெரிவிக்குமாறும் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

நவம்பர் மாதம் 11 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்து புதிய ஜனாதிபதி சத்தியப் பிரமாணம் செய்வாரென்பதை நாட்டில் அனைத்து மக்களும் அறிவர்.

நவம்பர் மாதம் 11 ஆம் திகதி வரை பொலிஸ் மாஅதிபருக்கு தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளதால் தேர்தல் நடவடிக்கைகளுக்கும் தேசிய பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதால் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்துக்கு வெளியில் மக்கள் மத்தியிலும் பாரிய சர்ச்சைகள் உருவாகியுள்ளன. அந்த வகையில் இந்த விவகாரம் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. அரசியலமைப்பின் 121 ஆவது உறுப்புரையின் படி 09 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 04 ஆவது உறுப்புரையின் படி மக்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு 103 (2) பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தினால் மேற்படி மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விசாரணை நிறைவு பெறும் வரை இந்த தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்குப் பின்னரும் இந்த தடையுத்தரவை நீடிக்கும் தன்மையே உயர் நீதிமன்றத்தின் அறிவிப்பில் காணப்படுகிறது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தை நீதிமன்றம் பெறவில்லை. அரசியலமைப்பின் 41(ஆ)11 உறுப்புரையின் படி ஜனாதிபதியின் பரிந்துரைக்கமைய அரசியலமைப்பு பேரவையினால் பதில் பொலிஸ் மாஅதிபர் ஒருவரை நியமிக்க அனுமதி வழங்காவிடின்14 நாட்களுக்கு அதிகரிக்காத நாட்களுக்காக பொலிஸ் மாஅதிபராக செயற்பட எவரேனும் ஒரு நபரை நியமிக்க முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக ஜனாதிபதி போட்டியிடவுள்ளதாலேயே இந்த பிரச்சினை உருவாகியுள்ளது. பொலிஸ் மாஅதிபரை ஜனாதிபதியே நியமிக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அரசியலமைப்பு பேரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் அரசியலமைப்பின் 41(ஆ) உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியினால் பொலிஸ் மாஅதிபர் நியமிக்கப்படுகிறார். அந்த வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையான ஆதரவை பெற்றுக்கொண்டதன் பின்னரே பொலிஸ் மாஅதிபரை பதவியிலிருந்து நீக்க முடியும். நடைமுறையிலுள்ள சட்டத்துக்கமைய பதில் பொலிஸ் மாஅதிபர் ஒருவரை நியமிக்கும் சட்ட ஏற்பாடுகள் எதுவும் ஜனாதிபதிக்கு கிடையாது. சட்ட ஏற்பாடுகள் இல்லாத்தால் பதில் பொலிஸ் மாஅதிபராக ஒருவரை நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றம் அறிவிக்க முடியாது.

இவ்வாறான நிலையில், பொலிஸ் கட்டளைச் சட்டத்தை முழுமையாக ஆராய வேண்டும்.முன்னாள் பொலிஸ் மாஅதிபர் நியமனத்தின் போதும் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்ந்தது.

அந்த வகையில் பொலிஸ் மாஅதிபரை அவசரமாக வெளியேற்ற முடியாது. நடைமுறையிலுள்ள சட்டத்தை உயர் நீதிமன்றம் அமுல்படுத்த முன்வர வேண்டும்.

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படும் அதிகாரம் பொலிஸ் மாஅதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே பதில் பொலிஸ் மாஅதிபரை ஜனாதிபதியால் நியமிக்க முடியாது. பொலிஸ் மாஅதிபர் பதவியில் இன்னும் பொலிஸ் மாஅதிபர் உள்ளார். அந்த வகையில் இப்பதவி இன்றும் வெற்றிடமாகவில்லை.

அரசியலமைப்பின் 4(ஆ) உறுப்புரையின் பிரகாரம் நாட்டின் பாதுகாப்பு ஜனாதிபதிக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது. சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான அதிகாரம் பொலிஸ் மாஅதிபருக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையுத்தரவால் ஜனாதிபதிக்கு அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள 4(ஆ) அதிகாரம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இதனை முழுமையாக நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த தடையுத்தரவுக்கு எவ்வித சட்ட வலுவும் கிடையாது என்பதால் உயர் நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்க முடியாது. பொலிஸ் மாஅதிபருக்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையுத்தரவு தொடர்பில் அரசியலமைப்பு பேரவை உரிய கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 'தமிழி' தமிழியல்... *03ஆம் பக்கத் தொடர்*

*நடைபெறும்.*

*'உலய மயமாதலும் இலங்கை பொருளாதாரமும் எதிர்நோக்கும் சமகால சவால்கள்' எனும் தலைப்பில் சமூக அரசியல் செயற்பாட்டாளர் நடராஜா ஜனகன் உரை நிகழ்த்தவுள்ளார்.*

*இதேவேளை 'இலங்கையின் பெருந்தோட்ட பொருளாதாரம்: மறுசீரமைப்பின் தேவையும் மலையக மக்களின் எதிர்காலமும்' எனும் தலைப்பில் சமூக ஆய்வாளர் நாகரத்தினம் கிருஷ்ணகுமார் உரை நிகழ்த்தவுள்ளார்.*

*இதன்போது பனுவலின் நூல் கண்காட்சி மற்றும் விற்பனையும் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.*

## தங்கநகை வியாபாரிகள்...

சங்கத்தினரும் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். இக்கலந்துரையாடலில் போது சுங்க திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் திடீர் சோதனைகளால் நகைக் கடை உரிமையாளர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும், இதனால் நகைக்கடை தொழிலாளர் பாதிக்கப்படுவதாகவும் ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார். விமான நிலையமூடாகவும், துறைமுகங்களூடாகவும் வெளிநாடுகளிலிருந்து தங்கம் கடத்தப்படுகிறது. சுங்கவரி திணைக்களத்தினர் இவ்விரு இடங்களிலும் அவர்களத்து சோதனைகளை துரிதப்படுத்தினால் சட்டவிரோதமான இச்செயற்பாட்டை தடுக்க முடியும்.

## கட்டுப்பணம் ஓகஸ்ட்...

தெரிவித்துள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதி வரை காலை 08.30 முதல் பிற்பகல் 4.15 வரை கட்டுப்பணத்தை செலுத்த முடியும். 14ஆம் திகதி காலை 8.30 முதல் நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணத்தை செலுத்த முடியுமெனவும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்கீரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் 50,000 ரூபாவையும், வேறேதும் அரசியல் கட்சி ஒன்றினால் அல்லது வாக்காளர் ஒருவரினால் பெயர் குறித்த நியமனம் செய்யப்பட்ட வேட்பாளராயின் 75,000 ரூபாவையும் செலுத்த வேண்டுமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எந்த தவறான தீர்மானமும்...

தெரிவித்தார். அரசியலமைப்பு பேரவையின் அனுமதி மற்றும் பாராளுமன்றத்தின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியின் பதவியை வெற்றிடமாக்க வேண்டுமானால் அல்லது அந்த பதவியை நிறுத்துவதென்றால் விசேட நடைமுறைகள் காணப்படுவதால் அதன்படியே அந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமென்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பொலிஸ் மாஅதிபர் தொடர்பில் உயர் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள இடைக்கால தடையுத்தரவு தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன விசேட உரையொன்றை நிகழ்த்தினார். அந்த விசேட உரையையடுத்து ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கிடையில் நேற்று சபையில் பெரும் தர்க்கம் ஏற்பட்டது. அந்த தர்க்கத்தின்போது எதிர்க்கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

என்னால் எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்களால் தற்போதைய இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக பெரும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன . எனினும் நான் அவ்வாறான எந்தவொரு தவறான தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்பதனை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அரசியலமைப்புக்கமைய, நன்கு சிந்தித்தே தீர்மானம் எடுக்கப்பட்டது. அது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வேறு ஒருவருக்கோ தவறாக தெரியலாம். ஆனால் நாம் மனசாட்சிக்கு இணங்க அனைத்து விடயங்கள் தொடர்பிலும் முறையாக ஆராய்ந்து அரசியலமைப்புக்கமைய கலந்துரையாடல்களை மேற்கொண்டு தீர்மானங்களை எடுத்துள்ளோம். அதேவேளை, நான் வீட்டிலிருந்து கொண்டு தீர்மானங்களை எடுத்ததாக கூறப்படுவது முற்றிலும் தவறு . எவர் இத்தகைய தர்க்கத்தை முன்வைத்தாலும் நாங்கள் சரியான தீர்மானங்களையே எடுத்துள்ளோம். இந்நிலையில் தற்போது பொலிஸ் மாஅதிபரின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பு பேரவையின் அனுமதி மற்றும் பாராளுமன்றத்தின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்பட்டுள்ள இந்த அதிகாரி தொடர்பில் அரசியலமைப்பில் தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி அவரின் பதவியை வெற்றிடமாக்க வேண்டுமானால் அல்லது பதவியை நிறுத்துவதென்றால் விசேட நடைமுறைகள் உள்ளன. அதன்படியே அந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

அவ்வாறில்லையெனில் அதனை மீண்டும் உயர் நீதிமன்றத்துக்கு கொண்டு சென்று அங்கு இது தொடர்பில் தீர்மானிக்க நேரும். இந்த நிலையில், ஜனாதிபதியினாலும் தீர்மானம் எடுக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. இது தவறு என்றால் நீதிமன்றம் சென்று தீர்வொன்றைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மூன்று மாடி கட்டடத்தில்...

கொள்ள மாடியிலிருந்து கீழே குதித்ததில் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து தீ பரவிய இடத்துக்கு வருகை தந்த தீயணைப்புப் படையினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஹெலிகொப்டர்களின் உதவியுடன் கட்டடத்திலிருந்த பலரும் மீட்கப்பட்டுள்ளனர். தீ விபத்து ஏற்பட்ட கட்டடத்தில் சுமார் 600 பெண்கள் தங்கியிருந்ததாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொருளாதார பரிமாற்ற சட்டமூலம்...

கல்வி மற்றும் தொழில்நுட்ப அமைச்சுகள் இணைந்து செயற்படுத்தும் 'டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம் 2030' வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களுக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று (26) ரம்புக்கனை பராக்கிரம மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்திற்கு அமைவாக நாட்டில் டிஜிட்டல் மயமாக்கலை விரிவுபடுத்துவதற்காக தொழில்நுட்ப அமைச்சு 'டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம் 2030' திட்டத்தை ஆரம்பித்துள்ளது. உட்கட்டமைப்பு, இணைப்புகள், பிரவேசம், திறன்கள், கல்வியறிவு, கைத்தொழில் மற்றும் தொழில், இணைய பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் தனியுரிமை, டிஜிட்டல் நிதி சேவைகள் டிஜிட்டல் மயமாக்கல் உள்ளிட்ட அடிப்படை தூண்களின் கீழ் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.டிஜிட்டல் மயமாக்கலை கீழ் மட்டத்திற்கு கொண்டு செல்லும் ஆரம்பகட்டம் கேகாலை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு, கேகாலை மாவட்டத்தில் உள்ள 42 பிரிவெனாக்கள் மற்றும் 62 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களும் விநியோகிக்கப்பட்டன.

இதேவேளை, ஒரு மில்லியனுக்கும் அதிகமான நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் கேகாலை மாவட்டத்தில் QR குறியீட்டு முறையை அறிமுகப்படுத்துவதற்காக பின்னவல மிருகக்காட்சிசாலை வளாகத்தில் இன்று(26) நடைபெற்ற நிகழ்விலும் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

சுற்றுலா மற்றும் காணி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் பின்னவல கித்துல்கல சுற்றுலா வலய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரம்புக்கனை பிரதேச செயலகப் பிரிவில் 07 புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன. இதன் கீழ், ஹிரிவடுன்ன பாலத்திற்கு அருகாமையில் இருந்து பின்னவல யானைகள் சரணாலயம் வரையிலான பாதையை அபிவிருத்தி செய்தல், பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் பின்னவல மிருகக்காட்சிசாலையைச் சுற்றி வீதி விளக்குகள் அமைத்தல், பின்னவலவை புராதன சுற்றுலாத்தலமாக மேம்படுத்துதல், தெலிவல கொட்டாவெஹர விகாரையை சுற்றுலா தலமாக அபிவிருத்தி செய்தல், பின்னவல யானைகள் சரணாலயத்திற்கு அருகில் இருக்கும் வாகன தரிப்பிடம் மற்றும் உத்தேச வணிக வளாகத்தின் அபிவிருத்தி, பின்னவல மிருகக்காட்சிசாலையின் வாகன தரிப்பிடம் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பின்னவல யானைகள் சரணாலயத்திற்கு முன்பாக வீதி அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்தல் என்பனவும் இதன் போது அபிவிருத்தி செய்யப்படுகிறது.பின்னவல மிருகக்காட்சிசாலை வளாகத்தில் உள்ள DIGIECON காட்சிக் கூடத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விஜயம் செய்ததுடன், QR குறியீடு மூலமான கொடுப்பனவுகளை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் பின்னவல வாகொல்ல விவசாய பயிற்சி நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ள கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக கட்டிட வளாகத்தையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பார்வையிட்டார்.

தொழில்முனைவோருக்கு SLS சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பாடசாலைக்கு இன்று வந்த போது நான் பாடசாலைக்குச் சென்ற காலம் நினைவுக்கு வந்தது. அப்போது எங்களிடம் கரும்பலகையும் சுண்ணாம்புத் துண்டும் மட்டுமே இருந்தன.

அன்று இந்த வசதிகள் இருக்கவில்லை. பல்கலைக்கழகக் கல்வியை முடித்த பிறகு தான் முதன்முறையாக கணினியை பார்த்தேன். இன்று உங்களிடம் நவீன உபகரணங்களுடன் வசதியான வகுப்பறைகள் உள்ளன. இன்றைய உலகம் அனைத்து அம்சங்களிலும் வேகமாக மாறி வருகிறது. அந்த மாற்றத்தை எதிர்கொள்ள தேவையான அறிவையும் பெற வேண்டும்.

நாடு வங்குரோத்தடைந்த சமயத்தில் அந்த வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டு ஒரு நாடாக எப்படி முன்னேறுவது என்று யோசித்தேன்.

மேலும் நமக்குத் தேவையான அந்நியச் செலாவணியை எப்படித் தேடிக்கொள்வது என்ற கேள்வியும் இருந்தது. புதிய தொழில்நுட்ப அறிவுடன் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு விரைவாக மாற வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்தோம். இனிமேலாவது அதற்காக பாடுபட வேண்டும்.

அதன்படி விவசாயம் மற்றும் வணிகத் துறையிலும், பாடசாலைகளிலும் டிஜிட்டல் மயமாக்கலை கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்படி பாடசாலைகளிலும் பிரிவெனாக்களிலும் ஸ்மார்ட் வகுப்பறைகளை உருவாக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கிராமப்புறங்களுக்கும் இதன் நன்மைகளை பெற்றுக்கொடுக்க வேண்டும். அதற்காக எலோன் மாஸ்க்கை இலங்கைக்கு வந்து பணிகளை ஆரம்பிக்குமாறு அழைத்தேன். தற்போது அதற்கு தேவையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப அறிவை முடிந்தவரை கிராமத்திற்கு எடுத்துச் செல்ல எதிர்பார்க்கிறோம். அதைப் பயன்படுத்துவதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்து இந்த தொழில்நுட்ப அறிவை பயன்படுத்தலாம். நாட்டில் பசுமை, டிஜிட்டல் பொருளாதாரமும் உருவாக்கப்பட வேண்டும். கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் AI தொழில்நுட்பம் குறித்து விவாதம் நடைபெற்றது. அதன்போது ChatGPT இலிருந்து பெற்றுக்கொண்ட விடயங்களையே பலரும் கூறினர். பாராளுமன்றம் இப்போது அத்தகைய நிலையை அடைந்துள்ளது. இந்த தொழில்நுட்பத்தை நாம் சரியாக பயன்படுத்த வேண்டும்.

சில சமயங்களில் இந்தத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மத விடயங்களை திரிபுபடுத்திக் கூறலாம். அந்த நிலையை தடுப்பதற்கான சட்ட வரைவை நாம் இப்போது உருவாக்கி வருகிறோம். இந்தப் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் வேளையில் இந்தியாவின் ஒத்துழைப்பை பெற தீர்மானித்துள்ளோம். அதேபோல் தொழில்நுட்பத்தை மையப்படுத்திய பல்கலைக்கழகமொன்றை அமைக்கவும் தீர்மானித்துள்ளோம்.

இந்தத் தொழில்நுட்ப அறிவைக் கொண்டு, நாட்டில் புதிய பொருளாதார மாற்றத்தை உருவாக்கி முன்னோக்கிச் செல்ல எதிர்பார்க்கிறோம். அதற்குத் தேவையான சட்டங்களை உருவாக்கும் வகையில் பொருளாதார பரிமாற்ற சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம். இது குறித்த விவாதமும் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது" எனத் தெரிவித்தார்.

# பொது வேட்பாளர் என்பது மக்களின் வாக்கினை சிதறடிக்கும் செயல்

புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

இதுவரை காலமும் எமது வடக்கு, கிழக்கு மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் அனைத்தும் ஜனாதிபதி தேர்தலை மக்களின் எதிர்பார்ப்புகள், அபிலாசைகள், கோரிக்கைகளை நிறைவேற்றும் நோக்குடன் அணுகவில்லை என்பது நிதர்சனமான உண்மை.

இது இவ்வாறு இருக்கையில் இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு ஒரு தமிழ் பொது வேட்பாளரை தேர்தலில் போட்டியிட வைப்பதற்கு பெரும்பாலான கட்சிகள் முனைப்பை காட்டி வருவதுடன் அதற்கான ஏற்பாடுகளை பெருவாரியாய் முன்னெடுத்து வருகின்றன.

இந்த செயற்பாடானது வெறுமனே ஜனாதிபதி தேர்தலில் மக்களின் வாக்குகளை சிதறடிக்கச் செய்து தாங்கள் ஆதரவளிக்கும் ஒரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வேட்பாளரை வெற்றி பெறச் செய்து தமதும் தம்மைச் சார்ந்தவர்களதும் முன்னேற்றத்தை அடைதலே ஆகும்.

இதனால் அடிப்படை மக்களுக்கு எவ்வித நன்மையோ பலன்களோ தீர்வுகளோ முன்னேற்றமோ கிடைக்க எவ்விதமான நடைமுறை சாத்தியமும் இல்லை.

எனவே மேற்கூறிய எமது மக்களுக்கு பலனற்ற விடயத்தில் கவனம் செலுத்துவதை விடுத்து இம்முறை நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலை எமது மக்களின் அடிப்படை தேவைகள் அபிவிருத்தி முன்னேற்றம் வளமான வாழ்வு என்பதனை நோக்கிய எமது எதிர்பார்ப்புகள் அபிலாசைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் எமது கோரிக்கைகள் நிபந்தனைகளை ஏற்று உடன்படும் பெரும்பான்மை வாக்கு பலம்முள்ள ஒரு வேட்பாளருடன் இணக்கப்பாடு ஒன்றினை உருவாக்கிக் கொள்வதன் மூலம் எமது மக்களின் பெறுமதி மிக்க வாக்குகளை வழங்கி நாம் ஆதரவளிக்கும் ஜனாதிபதி வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய நாம் தயாராக உள்ளோம்.

இதன் மூலம் எமது மக்கள் சார்ந்த அடிப்படை பொருளாதார சமூக முன்னேற்றத்தை அடைய வழி செய்தலே நமது கட்சியின் தார்மீக சிந்தனை ஆகும் .

ஜனநாயகத்தில் வாக்குகளே மக்களின் பலம் எனவே எமது பலத்தையே நாம் நமக்கானதாக்குவோம்.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் முல்லைதீவு மாவட்டத்தில் தளமாகக் கொண்டு இயங்கி வரும் தமிழர் மரபுரிமைக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கின் உதயம்



வரலாற்று சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மகோற்சவ திருவிழாவில் கைலாய வாகன திருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம். யாழ்.விசேட நிருபர்

## யாழில் வாள் முனையில் மோட்டார் சைக்கிள் கொள்ளை

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் வாள் முனையில் மோட்டார் சைக்கிளில் வழிப்பறி செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோண்டாவில் வீதியில் இளைஞன் ஒருவர் கடந்த (24) புதன்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை, கோண்டாவில் இந்துக் கல்லூரிக்கு முன்பாக காலை நொண்டியவாறு இளைஞன் ஒருவர் மோட்டார் சைக்கிளை வழி மறித்துள்ளார்.

அதனால் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் மோட்டார் சைக்கிளை நிறுத்திய வேளை, நொண்டிக் கொண்டிருந்த நபர் தனது உடைமையில் மறைத்து வைத்திருந்த வாளினை எடுத்து மோட்டார் சைக்கிள் ஓட்டிவந்தவரை வெட்ட முயன்றுள்ளார்.

அதற்கு இளைஞன் எதிர்ப்புக் காண்பிக்க, வீதியின் ஓரத்தில் மறைந்திருந்த மற்றுமொருவர் வாளுடன் வெளியே வந்து இளைஞனை வெட்ட முயன்றபோது, இளைஞன் அவ்விடத்தில் இருந்து தப்பியோடியுள்ளார்.

அதனை அடுத்து மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்ட தாக்குதலாளிகள் இருவரும் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பயிற்சிப் பட்டறை



சாவகச்சேரி விசேட நிருபர்

ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பின் முல்லைத்தீவு நிலையத்தின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான இருநாள் பயிற்சிப் பட்டறையானது அண்மையில் ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பின் கிளிநொச்சி அலுவலகத்தில் முன்னெடுக்கப்பட்டது. இளைஞர்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படுத்தல், மோதல்களை மாற்றியமைத்தல், உறுதியான நல்லிணக்கத்திற்கு இளைஞர்களின் பங்களிப்பினை வலுப்படுத்தல், முறிவுற்ற உறவுகளை மறுசீரமைத்தல் உள்ளிட்ட நோக்கங்களுக்காக மேற்படி பயிற்சிப் பட்டறை முன்னெடுக்கப்பட்டது.

## மானிப்பாய் பொலிஸ் நிலையம் முன்பாக மக்களை அச்சுறுத்திய வன்முறை கும்பல்

யாழ்.விசேட நிருபர்

மானிப்பாய் பொலிஸ் நிலையம் முன்பாக இடம் பெற்ற போராட்டத்தின் போது, மூன்று மோட்டார் சைக்கிளில் வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வந்த வன்முறை கும்பல் மக்களை அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

மானிப்பாய் கட்டுடை பகுதியில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை ஹயஸ் ரக வாகனம் மோதி பெண்ணொருவர் உயிரிழந்ததுடன், அப்பெண்ணின் மகள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தினை ஏற்படுத்திய ஹயஸ் வாகன சாரதி தப்பியோடிய நிலையில், வாகனத்தில் இருந்த இருவரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

வாகனத்தில் வந்த சாரதி உள்ளிட்ட நால்வரும் நிறை போதையில் காணப்பட்டதாகவும், சாரதி போதையில் வாகனம் செலுத்தியே விபத்தினை ஏற்படுத்தினார். அதனால் அவரை விரைந்து கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையம் முன்பாக இரவு கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவ்வேளை மூன்று மோட்டார் சைக்கிளில் வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடன் வந்த 06 பேர் கொண்ட வன்முறை கும்பல் மக்களை அச்சுறுத்தும் விதமாக செயற்பட்டனர்.

அதன்போது மக்கள் மத்தியில் இருந்த சில இளைஞர்கள் இக் கும்பலைச் சேர்ந்தவர்களை மடக்கி பிடிக்க முயன்ற போதும் ஒருவரை மாத்திரமே மோட்டார் சைக்கிளுடன் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்தனர். ஏனைய ஐவரும் தப்பியோடியுள்ளனர்.

பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட நபரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, குறித்த வன்முறை கும்பல் சண்டிலிப்பாயிலுள்ள கடையொன்றின் மீது தாக்குதல் நடத்திவிட்டு, சங்கானையில் இளைஞன் ஒருவர் மீது வாள் வெட்டு தாக்குதலையும் நடத்திவிட்டே, மானிப்பாய் பொலிஸ் நிலையம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை அச்சுறுத்த வந்திருந்தமை தெரிய வந்துள்ளது.

குறித்த வன்முறை கும்பலுக்கும், விபத்தினை ஏற்படுத்திய கும்பலுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கலாம். எனவே தப்பியோடிய ஐவரையும் கைது செய்து கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.



ஹாலிஎல உடுவரைக் கீழ்ப்பிரிவு, புகையிரத வீதிக்கு மேற்பகுதியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானம், கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ அருணாச்சலம் அரவிந்தகுமார் அவர்களின் 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டினூடாக விரிவுபடுத்தப்பட்டது. மைதானத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் கலந்துகொண்டு சிறப்பித்தார். இதன் போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## அகில இலங்கை சமாதான நீதவான்களாகிய பிராந்திய ஊடகவியலாளர்கள்

பிராந்திய ஊடகவியலாளரான, நுவரெலியா இஸ்கிராப் தோட்டத்தை வசிப்பிடமாக கொண்ட வடிவேல் சரஸ்வதி தம்பதிகளின் மூத்த புதல்வன் கார்த்திக் அகில இலங்கை சமாதான நீதவானாக (24.07.2024) நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி என். டபிள்யூ. கே. எல். பிரபுதிகா லாங்காங்கனி அவர்களின் முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் நுவரெலியா புனித சவேரியார் கல்லூரியின் பழைய மாணவரும், ஊடகவியலாளரும், மனித உரிமைகள் அமைப்பு லங்கா நிறுவனத்தின் ஊடக அங்கத்துவரும், சன் பேர்ட்ஸ் விளையாட்டு கழகத்தின் செயலாளரும்,



நுவரெலியா உதைப்பந்தாட்ட சங்க உப செயலாளருமாவார்.

அதேபோல நுவரெலியா மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர் எட்வர்ட் ஜோர்ச் அகில இலங்கை சமாதான நீதவானாக நுவரெலியா நீதவான் நீதிமன்ற நீதிபதி என். டபிள்யூ. கே. எல். பிரபுதிகா லாங்காங்கனி அவர்களின் முன்னிலையில் (24.07.2024) காலை சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கந்தப்பளை போட்ஸ்வூட் தோட்டத்தை சேர்ந்த சுப்ரமணியம் அற்புதமேரி தம்பதிகளின் புதல்வரான இவர் சிறந்த சமூக சேவையாளரும், லிந்துலை வோல்ட்றிம் வித்தியாலயம், கந்தப்பளை மெதடிஸ்ட் கல்லூரி மற்றும் நுவரெலியா புனித சவேரியார் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், புனித சவேரியார் தேவாலய நிதி குழு உறுப்பினரும், ஆலய பங்கு சபை உறுப்பினருமாவார்.

ஆ.ரமேஸ்

## மலைச்சாரல்

## தொழிலாளியை வம்புக்கு இழுத்து தாக்கிய தோட்ட அதிகாரிக்கு எதிராக கண்டன போராட்டம்

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒட்றீ தோட்டத்தில் தொழிற்சங்க தலைவரான தோட்ட தொழிலாளி ஒருவரை தோட்ட அதிகாரி தாக்கிய சம்பவம் தொடர்பில் தோட்ட அதிகாரியை கைது செய்யுமாறும், தோட்டத்தைவிட்டு வெளியேற்றம் செய்யும்படியும் தொழிலாளர்கள் வியாழக்கிழமை (25) காலை வீதியிலிறங்கி போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இன்வெறி என்.சி தோட்ட சந்தியில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் ஒட்றீ மற்றும் இன்வெறி ஆகிய தோட்ட மக்கள் தோட்ட அதிகாரிக்கு எதிராக கோஷங்கள் எழுப்பி எதிர்ப்பு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, களனிவெளி பெருந்தோட்டமுகாமைத்துவநிறுவனத்தின் கீழ் இயங்கும் ஒட்றீ தோட்டத்தில் தொழிலாளியாகவும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தோட்ட கமிட்டி தலைவராகவும் எஸ்.சந்திரகுமார் செயற்பட்டு வருகிறார்.

இந்நிலையில், தற்போது 1700 ரூபாய் சம்பளம் தொடர்பாகவும், காங்கிரஸ் பொது செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கு ஆதரவாகவும் ஒட்றீ தோட்டத்தில் தொழிலாளர்கள் களனிவெளி பெருந்தோட்ட நிறுவனத்திற்கு எதிராக ஒன்றிணைந்த பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.



இந்த நிலையில் புதன்கிழமை (24) அன்று வீதியில் சென்ற தோட்ட கமிட்டி தலைவரான எஸ். சந்திரகுமார் என்பவரை தோட்ட அதிகாரியான காலே ஆராச்சி என்பவர் அழைத்து பேசியதுடன் தாக்கியும் உள்ளார்.

இந்த தாக்குதலை கண்டித்தே தோட்ட தொழிலாளர்கள் இந்த கண்டன போராட்டத்தில் களம் குதித்துள்ளதுடன் இது குறித்து காங்கிரஸ் தலைமையகத்திற்கும், நோர்வூட் பொலிஸ் நிலையத்திற்கும் முறையிட்டுள்ளனர்.

இதையடுத்து தொழிலாளி ஒருவரை தாக்குவதற்கு தோட்ட அதிகாரிக்கு அதிகாரம் இல்லை இதன் விளைவை தோட்ட அதிகாரி உணர வேண்டும் என்பதற்காகவும், தாக்குதலை நடத்திய தோட்ட அதிகாரியை கைது செய்வதுடன் தோட்டத்திலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் போராட்டத்தில் குதித்ததாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் நோர்வூட் பிரதேச இ.தொ.கா அமைப்பாளரான எஸ். தியாகு என்பவரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த கண்டன போராட்டத்தில் இ.தொ.கா தேசிய அமைப்பாளரும் முன்னால் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ.பி.சக்திவேல் தளத்திற்கு சென்று போராட்டத்தில் கலந்து கொண்டார்.

## குளவி கொட்டியதால் 4 பாடசாலை மாணவிகள் வைத்தியசாலையில்

மஸ்கெலியா நிருபர்

நல்லதண்ணி பொலிஸ் நிலைய பிரிவில் உள்ள நல்லதண்ணி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பிரிந்தா வயது 12, ஹரணி வயது 12, சாரதா வயது 12, பிரியா வயது 15 ஆகிய மாணவியர்கள் இன்று காலை தங்களது வீட்டிலிருந்து தங்களது பாடசாலைக்கு வரும் வழியில் மறே தோட்ட வலதள பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்கிய நிலையில், மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனரென நல்லதண்ணி தமிழ் வித்தியாலய அதிபர் எம். சரவணன் தெரிவித்தார்.



சம்பத் வங்கி பசறை கிளையின் அனுசரணையுடன் பசறை கோணக்கலை தமிழ் ஆரம்ப வித்தியாலய தரம் நான்கு மாணவர்களுக்கான ஒரு தொகுதி மாதிரி பரீட்சை வினாத்தாள்களும், சேமிப்புக்கான உண்டியல்களும் வழங்கிவைக்கப்பட்டன. இதன் போது பசறை சம்பத் வங்கியின் உதவி முகாமையாளர் எரங்க ஜெயவிக்ரம, பாடசாலை பிரதி அதிபர் சதாசிவம் தனேஸ், வகுப்பாசிரியர் நடராஜா மலர்வேந்தன் ஆகியோருடன் மாணவர்களையும் படங்களில் காணலாம். (படம்: லுணுகல நிருபர்)

## இலவச மாதிரி வினாத்தாள் வழங்கும் நிகழ்வு

தலவாக்கலை குறூப் நிருபர்

கொழும்பு புறக்கோட்டை இந்து இளைஞர் நற்பணி மன்றத்தால் வருடந்தோறும் தரம் 05 மாணவர்களுக்கான இலவசமாக விநியோகிக்கப்படும் முன்னோடி பரீட்சை வினாத்தாள்கள் இம்முறையும் வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் 2024ஆம் ஆண்டுக்கான மாதிரி வினாத்தாள்கள் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு (29) மாலை 5 மணிக்கு கொழும்பு விவேகானந்தா கல்லூரி (தேசிய பாடசாலை) பிரதான மண்டபத்தில் தலைவர் S. சுரேஷ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் மன்ற போஷகர்கள், நிர்வாகக் குழுவினர், பிரதம விருந்தினராக அதிபர் எம்.மூவேந்தன் (விவேகானந்த கல்லூரி கொழும்பு 13) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கடிதங்களை அனுப்பிய கொழும்பு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் கலந்து கொண்டு அன்றைய தினம் உங்கள் வினாத்தாள்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# கிழக்கின் குரல்



## உலகிலே கடற்கரையோடு அமைந்துள்ள திருகோணமலை திறந்த வெளி நகர மான் பூங்கா

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

திருகோணமலை மான் பூங்கா உலகின் கடற்கரையோரத்தில் மிகவும் இயற்கையான சூழல் திறந்த நகர மான் பூங்காவாக கொண்டாடப்படுகிறது.

மான்களின் இயற்கையான வாழ்விடத்தை ஆதரிக்கும் வகையில் பூங்காவின் சூழல் பராமரிக்கப்பட்டு, அவை சுதந்திரமாக சுற்றித் திரிவதற்கும் பார்வையாளர்களுடன் நிலையான முறையில் தொடர்புகொள்வதற்கும் அனுமதிக்கிறது.

திருகோணமலை மான் பூங்கா தனிச்சிறப்பு வாய்ந்தது, இது திறந்த நகர மான் பூங்காக்களில் அதிக மான்களைக் கொண்டுள்ளது, திருகோணமலை நகரம் முழுவதும் 1,000க்கும் மேற்பட்ட மான்கள் பரவியுள்ளன. இந்த அதிக எண்ணிக்கையிலான மான்கள் ஒரு தனித்துவமான அம்சமாகும், இது உலகெங்கிலும் உள்ள மற்ற ஒத்த பூங்காக்களிலிருந்து தனித்து நிற்கிறது.



பூங்காவில் உணவுக் கடை உள்ளது, பார்வையாளர்களுக்கு பல்வேறு உணவு விருப்பங்களை வழங்குகிறது. இது பூங்காவின் சுற்றுச்சூழல் நட்பு கருப்பொருளுடன் ஒத்துப்போகிறது, கிடைக்கும் உணவு நிலையானது மற்றும் சுற்றுச்சூழல் உணர்வுடன் இருப்பதை உறுதி செய்கிறது.

நாரா மான் பூங்காவுடன் ஒப்பிட்டு பார்க்கையில், ஜப்பானில் உள்ள நாரா மான் பூங்காவில், மான்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஒரே உணவான குறிப்பிட்ட சத்தான பிஸ்கட்டுகளை அரசு தயாரித்து விற்பனை செய்யும் இடத்தில், திருகோணமலை மான் பூங்காவில் இதுபோன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை. நாராவில், இந்த பிஸ்கட்கள் விலை அதிகமாகவும் உள்ளது, என்றாலும் மான்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்துகிறது அரசாங்கம். ஆனால் இயற்கை உண்ணி விலங்குகளுக்கு இயற்கையான உணவுகளை கொடுப்பதே அவற்றின் வாழ்வியலுக்கு சிறந்தது.

திருகோணமலை மான் பூங்கா தனித்து நிற்கிறது ஏனெனில் பார்வையாளர்கள் நுழைவதற்கு கட்டணம் இல்லை. இது பரந்த அளவிலான மக்களுக்கு அணுகக்கூடியதாக ஆக்குகிறது, மேலும் மான்கள் மற்றும் அவற்றின் இயற்கைச் சூழலை எந்த நிதித்தடையும் இல்லாமல் அதிக தொடர்பு மற்றும் பாராட்டுதலை ஊக்குவிக்கிறது.

இந்த ஒவ்வொரு அம்சமும் திருகோணமலை மான் பூங்காவின் தனித்துவமான அம்சங்களை எடுத்துக்காட்டுகிறது, இது இயற்கை மற்றும் வனவிலங்கு ஆர்வலர்களுக்கு ஒரு தனித்துவமான மற்றும் கவர்ச்சிகரமான இடமாக அமைகிறது.

## அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(தம்பலகாமம் குறூப் நிருபர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப்பிரிவின் அரபா நகரை பிறப்பிடமாகவும் கிண்ணியாவை வசிப்பிடமாகவும் கொண்ட முஹம்மது ஹனிபா அனஸ் மாவட்ட சமாதான நீதவானாக கடமையாற்றி தற்பொழுது முழு தீவுக்குமான அகில இலங்கை சமாதான நீதவானாக திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதவான் எம். கணேசராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் (25) சத்திய பிரமாணம் செய்துகொண்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் இளமானி பட்டத்தை பூர்த்தி செய்த இவர் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி வருகிறார்.

அதீத சமூக ஈடுபாடு கொண்ட இவர் முகம்மது ஹனீபா மற்றும் அகமது லெப்பை மரியம் வீவி தம்பதிகளின் புதல்வருமாவார்.

## காட்டு யானை தாக்குதலில் 44 வயதுடைய நபர் உயிரிழப்பு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 5ஆம் கட்டை கடவான காட்டுப்பகுதியில் காட்டு யானை தாக்குதலுக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளார். இதுதொடர்பில் பிரதேச மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் உப்புவெளி பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை(25) அதிகாலையில் தனது மாடுகளை மேய்த்துக் கொண்டு காட்டுப்பகுதிக்கு சென்ற 44 வயதுடைய கே.ஜீ.நிலந்த இன்துனில் என்பவரே இவ்வாறு காட்டு யானை தாக்குதலுக்குள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா





சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் மற்றும் நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் கடந்த புதன்கிழமை பாடசாலை முன்றலில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பழைய மாணவரும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியற் பீட விரிவுரையாளருமான பொறியியலாளர் ஏ.எம். அஸ்லம் ஸஜா கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதியாக பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளரும் கல்முனை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செயற்றிட்ட பொறியியலாளருமான எம்.ஐ.எம். றியாஸ் கலந்து சிறப்பித்தனர். இதன்போது அதிதிகளால் மாணவர் தலைவர்களுக்கும் வகுப்புத் தலைவர்களுக்கும் நியமனக்கடிதங்கள் வழங்கி சின்னங்களும் சூட்டப்பட்டன.

(எம்.எம்.ஜெஸ்மின்)

## அரசகரும மொழிக் கொள்கை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

திருகோணமலை நிருபர்





அரசகரும மொழிகள் தினத்தை முன்னிட்டு மாவட்ட செயலகத்திலுள்ள அனைத்து கிளைகளிலும் அரச உத்தியோகத்தர்களுக்கு அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் (25) திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அரசகரும மொழிகள் வாரம் மற்றும் தினத்தை முன்னிட்டு பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற இந்நிகழ்வின் முதல் நாள் நிகழ்வு அரச அலுவலகங்களில் பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களுக்கான அரசகரும மொழிக்கொள்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியே இதுவாகும். மொழிக் கொள்கையைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவம், இலங்கையின் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் மற்றும் அது தொடர்பான சட்டங்கள், அரசகரும மொழிக்கொள்கையின் சட்டப் பின்னணி, 1978 அரசியலமைப்பின் III ஆம் அத்தியாயத்தில் அடிப்படை உரிமைகள், நிர்வாக கட்டமைப்பு, அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்புகளை வழங்குதல், பிரதான அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கல் அலுவலரின் பொறுப்பு (COLIO), அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கல் அலுவலரின் பொறுப்பு (OLIO), அரசகரும மொழிகள் தினத்துடன் இணைந்த வாரத்தை கொண்டாடுதல், அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் அனுகூலங்கள் என பல விடயங்கள் இதன்போது கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளரும் சட்டத்தரணியும் ஏ.சி.எம் முஸிலினால் தெளிவூட்டப்பட்டன.

இதன்போது மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட களப்புக்கட்டு அல் அஷ்ரப் வித்தியாலய மாணவர்கள் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர். சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ் பாறூக் தலைமையிலான வைத்திய குழுவினர் குறித்த பாடசாலைக்கு சென்று மாணவர்களின் இதயம், கண்பார்வை, பற்சுகாதாரம், உடல் எடை என்பவற்றை பரிசோதனை செய்தனர். (பாலமுனை தினகரன் நிருபர்)

## அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளராக ஏ. ஜனூர்டீன் நியமனம்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரியின் புதிய பணிப்பாளராக இலங்கை தொழில்நுட்ப கல்விச்சேவையின் முதலாம் தர அதிகாரியான இறக்காமத்தைச் சேர்ந்த ஏ.ஜனுர்டீன் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார். அக்கரைப்பற்று தொழில்நுட்ப கல்லூரியின் ஸ்தாபக ஆங்கில பாடபோதனாசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றியதுடன், பின்னர் ஹாடி தொழில் நுட்பவியல் கல்லூரியில் பிரதிப் பணிப்பாளராகவும் சேவையாற்றினார்.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) பழைய மாணவரான இவர், மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## C Arm வசதியுடன் அளப்பரிய சேவையாற்றிவரும் என்பு முறிவு பிரிவு கல்முனை ஆதார வைத்தியசாலையில் புரட்சி

(காரைதீவு குறூப் நிருபர் சகா)

கல்முனை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் என்பு முறிவு நெரிவு பிரிவு (orthopetic unit) கடந்த காலங்களை விட மிகவும் சிறப்பாக பல வசதிகளுடன் இயங்கி வருகின்றது.

"சி"ஆம் (C Arm) என்று சொல்லப்படுகிற நவீன ரக எக்ஸ் கதிர் கருவியுடன் சிறப்பாக சத்திர சிகிச்சைகள் இடம்பெற்று வருகின்றன.

பிரபல என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் பததிநாதன் கலாவேந்தன் தலைமையிலான குழுவினர் வார்டில் இயங்கி வருகின்றார்கள்.

அங்கு ஆண்கள் பெண்களுக்கு என்று தனியான சத்திரசிகிச்சை கூடம் 24 மணிநேரமும் அங்கு தயார் நிலையில் இருக்கின்றது. கூடவே அம்பாறை மாவட்டத்தில் எங்குமில்லாத சிற்றி நவீன எக்ஸ் கதிர் இயந்திரமும் உள்ளது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரனின் முழு முயற்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட



இந்த என்புமுறிவு நெரிவு சிகிச்சைப் பிரிவு இன்றைய பணிப்பாளர் டாக்டர் ரங்கா சந்திரசேகரவின் வழிகாட்டலில் மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது.

தற்போது பணிப்பாளருக்காக பதில் கடமை புரியும் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் எஸ் ராஜேந்திரனிடம் நேற்று அங்கு சென்று கேட்ட பொழுது...

தற்போது என்பு முறிவு நெரிவுப் பிரிவு பல நவீன உபகரணங்களுடன் அளப்பரிய சேவைகளை அங்கு செய்துவருகின்றது. எங்களுக்கு கிடைத்த ஒரு மாபெரும் சொத்து என்பு முறிவு வைத்திய நிபுணர் டாக்டர் கலாவேந்தன் அங்கு வயது வந்தோர் முதல் சிறு பிள்ளை வரை வளை பாத கிளினிக் ஏனைய கிளினிக்குகளை சிறப்பாக நடத்தி வருகின்றார்.

அர்ப்பணிப்பு ஊழியர்களுடன் சத்திர சிகிச்சை கூடம் அங்கு தனியாக இயங்கி வருகின்றது. இதனால் அங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தினம் கூடி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. முன்னாள் பணிப்பாளர் டாக்டர் முரளீஸ்வரனின் பணி பாராட்டத்தக்கது.

இன்றைய பணிப்பாளர் டாக்டர் ரங்கா சந்ரசேன அதனை தொடர்ந்து சிறப்பாக முன்னெடுத்து வருகிறார் என்றார். என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் பத்திநாதன் கலாவேந்தன் சத்திர சிகிச்சை கூடத்தில் மிகவும் பிஸியாக இயங்கி கொண்டிருக்கும் வேளையில் சந்தித்து கேட்டபோது...

விபத்து மற்றும் அவசர பிரிவில் இருந்து இந்த எலும்பு முறிவு நெரிவு பிரிவு இயங்க ஆரம்பிக்கின்றது. இங்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் முதியோர்களுக்கான கிளினிக் நடைபெறுகிறது. அதேபோன்று வெள்ளிக்கிழமைகளில் சிறுவர்களுக்கான கிளினிக் நடைபெறுகிறது.

எமது வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் சக வைத்திய அதிகாரிகள் தாதிய உத்தியோகத்தர்கள் ஏனைய ஊழியர்கள் பலத்த ஒத்துழைப்பை வழங்கி வருவதே இன்றைய வெற்றிக்கு காரணம்.

நிர்வாகத்தோடு இணைந்து இந்த வேலைகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம் .பொது மக்களும் ஏனைய வைத்திய சாலைகளும் நிறைந்த ஒத்துழைப்பு தருகிறார்கள் என்றார்.

## அம்பாறை மாவட்டத்தில் நெற்செய்கையில் கூடுதல் விளைச்சல்

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் வேளாண்மை அறுவடையில் கூடுதல் விளைச்சலும், நியாயமான விலையும் கிடைத்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் நெற்பயிர்ச்செய்கை அறுவடை இடம்பெற்று வருகிறது.

ஒரு ஏக்கர் சுமார் 40 முதல் 50 மூட்டைகள் அறுவடையின் மூலம் விளைச்சல் கிடைத்து வருகிறது. கடந்த இருபோகங்களில் நெற்செய்கையில் சிறந்த விளைச்சல் கிடைக்காமையால், விவசாயிகள் கடுமையான கஷ்டத்தை எதிர்கொண்டு விரக்தியடைந்திருந்தனர்.

இம்முறை நெற்செய்கைக்கான உரம், களைநாசினி, கிருமிநாசினிகள் குறைந்த விலையில் கிடைத்தமையால், கூடுதலான விளைச்சலும், நியாயமான விலையும் கிடைத்து வருவதையிட்டு அம்பாறை மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

கூடுதலான விளைச்சலும், நியாயமான விலையும் கிடைத்து வருகின்றமையினால் அடுத்த போகத்திற்கான வயல் நிலத்தின் குத்தகை அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இன்னும் ஒரு சில வாரங்களில் அம்பாறை மாவட்டத்தில் நெற்செய்கை அறுவடை நிறைவு பெறவுள்ளது.

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஒலுவில் அஷ்ரப் நகர் தீகவாபி பிரதான வீதி புனரமைப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

ஒலுவில் அஷ்ரப் நகர் தீகவாபி பிரதான வீதியை புனரமைக்கும் வேலைத்திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வீதி புனரமைப்பு பணிகளை பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார். பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதியுதவியுடன் பீ.எஸ்.டி.ஜீ நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக ரூ.06.51 மில்லியன் செலவில் இவ்வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது. இந்நிகழ்வில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்று பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸ் மற்றும் ஒலுவில் பெரிய ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகளும், பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# தனித்துவமான நிகழ்வின் இறுதிப் பருவகாலம்: Lunuganga Season 3 ஆரம்பம்

ஜெப்றி பாவா அவர்களின் தோட்டத்தின் 75 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் வகையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற Lunuganga நிகழ்ச்சித்திட்டத்தின் மூன்றாவது பருவகாலமானது 2024 ஜூலை 11 முதல் 14 வரையான காலப்பகுதியில் ஜெப்றி பாவா அறக்கட்டளையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் 1ஆம் மற்றும் 2ஆம் பருவகாலங்களாக அமைந்த பன்னிரண்டு மாத காலப்பகுதியில், *"nature and the natural," "empathy through ecology," "access beyond language,"* மற்றும் *"garden as lens"* ஆகியன தொனிப்பொருளில் தொடர் பல்குரல் செயற்திட்டங்கள் இடம்பெற்றுள்ளன. Lunuganga வில் இரு புதிய தாபிப்புக்கள் அடங்கலாக, கொழும்பு மற்றும் பெந்தோட்டையில் தொடர் நிகழ்வுகளுடன் மூன்றாவதும் இறுதியுமான பருவகாலத்தை இந்த அறக்கட்டளை வரவேற்றுள்ளது.



1959 மற்றும் 1961 க்கிடையில் ஜெப்றி பாவா அவர்களால் வடிவமைக்கப்பட்ட Kannangara House என்ற அறக்கட்டளையின் புதிய அலுவலகத்தின் திறப்புவிழா நிகழ்வுடன் வாரஇறுதி கொழும்பில் ஆரம்பமானது. தலைவர் சண்ண தஸ்வத்த அவர்கள் விருந்தினர்களை அவ்விடத்திற்கு வரவேற்றதுடன், பிரதம மேற்பார்வையாளர் ஷயாரி டி சில்வா அவர்கள் பதினெட்டு மாத கால நிகழ்ச்சித்திட்டத்தின் இது வரையான முன்னேற்றங்களையும், மூன்றாவது பருவகாலத்திற்கான முன்னோட்டத்தையும் வெளிப்படுத்தினார். மேற்பார்வையாளர் அனீஷா மஸ்டாச்சி அவர்கள் அதன் பின்னர் Kannangara House இன் முதல் தாபிப்பான Tree Talksசெவிமடுத்தல் அறையை அறிமுகப்படுத்தியதுடன், புதிதாக வெளிவந்துள்ள Garden Rhythms அடங்கலாக அனைத்து podcastபதிப்புக்களையும் வெளிக்காண்பித்திருந்தார். பிரதம தோட்டவியலாளர் முல்லே விதானலாகே அமரசிறி அவர்கள் தோட்டத்தின் தனித்துவமான அழகினை வர்ணிக்கும் விசேட பதிப்புடன், நேர்காணல் ஒன்றையும் வழங்கியிருந்தார்.

ஜூலை 13, சனிக்கிழமை ஜெப்றி பாவா அறக்கட்டளை மற்றும் எனா டி சில்வா பவுண்டேஷன் ஆகியன இணைந்து *Botany and Batik: the Living Archives of Ena de Silva* என்ற புதிய தாபிப்பினை திறந்து வைத்துள்ளன. ஜெப்றி பாவா அவர்களால் வடிவமைக்கப்பட்டு, முன்னர் எனா டி சில்வா அவர்களின் இல்லமாக அமைந்திருந்ததுடன், அதனைத் தொடர்ந்து 2017 இல் பெந்தோட்டையில் தனித்துவமான காப்பகத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட லுணுகங்கையின் 05ஆம் இலக்க அமைவிடத்தில் இது தாபிக்கப்பட்டுளள்ளது.

இயற்கை உலகு மற்றும் அவரது புடவை நடைமுறையின் அதன் செல்வாக்கு தொடர்பாக டி சில்வா அவர்களாக மிகக் கவனமாகத் திட்டமிட்டு ஆவணப்படுத்தப்பட்ட காப்பகத்திலிருந்து *Botany and Batik: the Living Archives of Ena de Silva* உதயமாகியுள்ளதுடன், அவரது புதல்வரான ஓவியர் காமினி ஜெயசூரிய அவர்களின் ஓவியங்களையும் இது கொண்டுள்ளது.

உலோக வேலைப்பாடு கலைஞரான சலோமி நாணயக்காரவினால் அவரது சூழலியல் நலன்களை கலை ரீதியாக வழங்குவதன் மூலம் இந்த தாபிப்பு ஜெயசூரியவின் நினைவை கௌரவித்தது.

தினகரன் வர்த்தக உலா

சம்ஸ் பாஹிம்

## சங்கட்டிகுளம கனிஷ்ட பாடசாலைக்கு புதுப் பொலிவு வழங்கிய ஏசியன் பெயிண்ட்ஸ்



சமுதாயத்திற்கென அர்த்தமுள்ள பங்களிப்பினை உருவாக்கும் இதயப்பூர்வமான அர்ப்பணிப்புடன், Asian Paints Causeway ஆனது மாணவர்களிற்கான கனவு கோட்டையாக மாற்றி, முழுப் பாடசாலையையும் வண்ணமடித்து புதுப்பித்து, சங்கட்டிகுளம சிங்கள கனிஷ்ட பாடசாலைக்கு தன்னுடைய உதவும் கரங்களை நீட்டியுள்ளது.

ஆனமடுவ சங்கட்டிகுளம சிங்கள கனிஷ்ட பாடசாலையை, சுற்றியுள்ள பத்திற்கும் மேற்பட்ட கிராமங்களின் பின்தங்கிய குடும்பங்களிலிருந்து பெரும்பாலும் வருகைத்தருகின்ற எண்ணிறந்த மாணவர்களின் நேசத்திற்குரிய இரண்டாம் வீடாக விளங்குகின்றது. அர்ப்பணிப்புமிக்க 13 ஆசிரியர்களது குழாத்துடன், பாடசாலையானது பிரகாசமிக்க எதிர்காலக் கனவுகள் துளிர்விடும் சூழலை வழங்குகிறது.

பாடசாலையானது அதனது நூற்றாண்டினை நெருங்கிக்கொண்டிருக்கையில், பெயர் பலகையொன்றுகூட இல்லாத நிலையில், புனருத்தாரனமானது அத்தியாவசியத் தேவையாக காணப்பட்டது. Asian Paints Causeway ஆனது பாடசாலைக்கொரு பெயர் பலகையை தாபித்து, அதனது நூறு வருட வரலாற்றில் முதற்தடவையாக முழுப் பாடசாலைக்கும் வண்ணம்பூசி மாணவர்களிற்கென ஒரு இனிமையான கற்றல் சூழலை மாற்றியதில் பெருமிதம் கொள்கின்றது.

ISGSD 2024 தொழில்துறை விருதுகளில்

## தூய்மையான வலுசக்தியின் முன்னோடி எனும் பசுமை முயற்சிகளுக்கான தங்க விருதை வென்ற யூனிலீவர்

நிலைபேறான வர்த்தக நடைமுறைகளில் பின்பற்றுவதில் புகழ்பெற்ற முன்னணி நிறுவனமான யூனிலீவர் ஸ்ரீ லங்கா, நிலைபேறான தொழில்துறை மேம்பாட்டுக்கான பசுமைத் தொழில்துறை முன்முயற்சியின் (ISGSD 2024) ஆரம்ப சர்வதேச கருத்தரங்கில், உற்பத்திப் பயன்பாடுகளுக்கான தூய்மையான வலுசக்திப் பிரிவில் உயரிய தங்க விருதைப் பெற்றுள்ளது. இந்த மதிப்புமிக்க அங்கீகாரமானது, சூழலுக்கும் அதனுடன் தொடர்புடைய சமூகங்களுக்கும், சிறந்த சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற, புத்தாக்கமான, தூய்மையான வலுசக்தி தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதில் யூனிலீவர் ஸ்ரீ லங்கா கொண்டுள்ள அற்புதமான சாதனைகளுக்கான கௌரவமாகும்.



யூனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் உலகளாவிய நிலைபேறானதன்மை மூலோபாய நடைமுறையில், கால நிலைக்கு சாதகமான நடவடிக்கைகளானது ஒரு அடிப்படைக் கோட்பாடாக விளங்குகின்றது. வணிக வளர்ச்சியை மேம்படுத்துவதில் நிறுவனம் ஆழ்ந்த உறுதியுடன் உள்ள அதே நேரத்தில், அது சேவையை வழங்குகின்ற சமூகங்களுக்குள்ளும் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இந்த அர்ப்பணிப்புக்கான ஒரு சான்றாக, யூனிலீவர் ஸ்ரீ லங்கா 2039 ஆம் ஆண்டுக்குள் அதன் முழு பெறுமதிச் சங்கிலியிலும் நிகர பூச்சிய காபன் வெளியீட்டை அடைவதற்கான இலட்சியம் மிக்க இலக்கை நிர்ணயித்துள்ளது.

யூனிலீவர் ஸ்ரீ லங்கா கொண்டுள்ள தூய்மையான வலுசக்திக்கான அர்ப்பணிப்பானது, மேம்படுத்தப்பட்ட வலுசக்தி செயற்திறனை நோக்கிய அதன் குறிப்பிடும்படியான முன்னேற்றத்தில் நிரூபணமாக உள்ளது. யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் ஹொரண தொழிற்சாலையானது 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் மின்சக்தி நுகர்வை 66% இனால் குறைத்துள்ளது.

இந்த வெற்றிக் கதையின் ஒரு முக்கிய உந்துசக்தியாக ஹொரண தொழிற்சாலையில் அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்ட 2.33 MW சூரிய மின்சக்தித் திட்டம் அமைகின்றது. இது புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதில் யூனிலீவர் ஸ்ரீ லங்கா கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கான தெளிவான சாட்சியமாகும்.

## சர்வதேச பயிற்றுவிப்பாளர்களுடன் இணைந்து நிறப்பூச்சு பூசுபவர்களுக்கு பயிற்சியளித்த JAT

மரப்பூச்சுக்கள், தூரிகைகள் மற்றும் றோலர்களுக்கு இலங்கையில் சந்தை முன்னோடியான JAT Holdings PLC, தனது நீண்ட கால அடிப்படையிலான JAT PintharooAbhiman வர்த்தக சமூக நலன்புரி முயற்சியின் கீழ் Harris சர்வதேச நிறப்பூச்சு பூசுபவர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2024 இனை ஆரம்பித்துள்ளது. தொழில் ரீதியாக தீந்தைபூசுபவர்களுக்கு, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் தூரிகைகள் மற்றும் றோலர்களுக்கு சந்தை முன்னோடியாகத் திகழும் Orkla House Care UK இலிருந்து சர்வதேச வல்லுனர்களின் வழிகாட்டலுடன் விரிவான தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குவதன் ஊடாக, தொழிற்துறையின் தராதரத்தை மேம்படுத்துவதே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.



நிறப்பூச்சு பூசுபவர் நிகழ்ச்சித் திட்டம் 2024 ஆனது உள்நாட்டில் உள்ள நிறப்பூச்சு பூசுபவர்களுக்கு மேம்பட்ட திறன்கள் மற்றும் அறிவை வழங்கி, அவர்களுடைய வேலையின் தரத்தை அதிகரிக்கும் வகையில் அவர்களுக்கு வலுவூட்டுவதற்காக, நாடளாவில் தொடர் செயலமர்வுகளை ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் அங்குரார்ப்பண கட்டமானது JAT இன் தலைமை அலுவலகத்தில் 2024 ஜூன் 26 முதல் 28 வரை இடம்பெற்றதுடன், 3 தினங்களாக இடம்பெற்ற இந்நிகழ்வில் JAT பணியாளர்கள், அனுபவம்மிக்க நிறப்பூச்சு பூசுபவர்கள் மற்றும் JAT முகவர் வலையமைப்பின் முக்கிய அங்கத்தவர்கள் என 200 க்கும் மேற்பட்டோர்கலந்து கொண்டனர்.

அங்குரார்ப்பண செயலமர்வில் Orkla House Care UK, L.G Harris & Co. Ltd சர்வதேச சந்தைப்படுத்தல் முகாமையாளர் மார்க் பார் மற்றும் John Green Dcor, UK இன் பயிற்சி ஆலோசகரான ஜோன் கிறீன் ஆகிய சர்வதேச தொழில்துறைவல்லுனர்களால் நடாத்தப்பட்டமை விசேடமாக முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்த வல்லுனர்களால்பயிற்றுவிக்கப்பட்ட JAT பணியாளர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டமானது இலங்கை எங்கிலும் வியாபிக்கும்வகையில் எதிர்கால அமர்வுகள் நடாத்தப்படவுள்ளன.

பல ஆண்டுகால ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் துணையுடன் தொழில்ரீதியாக நிறப்பூச்சு பூசுபவர்களுக்குதயாரிப்புக்கள் மற்றும் தீர்வுகளை வடிவமைப்பதில் OrklaHouse UK கவனம் செலுத்தியுள்ளது. இது Harris தயாரிப்பு வரிசை உலகெங்கிலும் தனது தரம் மற்றும் நீடித்த உழைப்பினை உறுதி செய்வதற்கு உதவியுள்ளது.

தத்துவரீதியான மற்றும் செயல் முறை ரீதியானநுண்ணறிவுகள் மூலமாக, Harris தூரிகைகள் மற்றும் றோலர்களை திறன்மிக்க வகையில் பயன்படுத்துவதன்மூலமாக, அதிசிறந்த தரத்தை வெளிக்கொண்டு வரும் அதேசமயம், நிறப்பூச்சு பூசுபவர்களுக்கு நேரத்தையும், செலவையும் மீதப்படுத்துவதற்கு இவை எவ்வாறு உதவுகின்றன என்பது தொடர்பில் இச்செயலமர்வுகளில் பங்குபற்றுபவர்களுக்கு அறிவூட்டப்படுகின்றது.

## தகுதியற்ற உள்ளடக்கத்திலிருந்து உயர்ந்த பாதுகாப்பை வழங்கும் Kaspersky Safe Kids

*Kaspersky Safe Kids* ஆனது தகுதியற்ற உள்ளடக்கத்தைத்தடுப்பதில் சிறப்பான செயல்திறனுக்காக, AVTEST மற்றும் AVComparatives ஆகிய சுயாதீன சோதனைநிறுவனங்களிடமிருந்து 'Approved' சான்றிதழ்களைப்பெற்றுள்ளது. Windows இயங்குதளத்தில் வயதுவந்தோருக்கான உள்ளடக்கத்தை வெற்றிகரமாகத் தடுப்பதில்சோதனைகள் முறையே 100% மற்றும் 98.1% நிரூபிக்கப்பட்டுள்ளன. AVTEST இன் ஆராய்ச்சியில், 2015 முதல் சோதனைகளின் வரலாற்றில் வயது வந்தோருக்கான உள்ளடக்கத்தைத் தடுப்பதன் மூலம் தீர்வு இரண்டு முறைமட்டுமே ஆனது. AVComparativesஇல், 5 பங்கேற்பாளர்களில்சான்றளிக்கப்பட்ட ஒரே தீர்வாக இந்த தீர்வு ஆனது, 2019, 2021 மற்றும் 2022 சோதனைகளில் இதே போன்ற நிகழ்வுகளை அங்கீகரிக்கிறது. இரண்டு சோதனை நிறுவனங்களும் தங்கள் சொந்தவழிமுறைகளின்படி சோதனைகளை நடத்தின. தயாரிப்பி தடுப்பு திறன்களை மதிப்பிடுவதற்கு, AVTEST ஆனது ஆறுமொழிகளில் 7,500 இணையதளங்கள் மற்றும் வயதுவந்தோருக்கான உள்ளடக்கம் (Adult Content), வன்முறை, ஆயுதங்கள் மற்றும் பிற 13 வகைகளில் பெற்றோர் கட்டுப்பாட்டுதீர்வுகளை மதிப்பிடுகிறது. AVComparatives நிறுவனம், 1,000 வயது வந்தோர் பிரிவு இணையதளங்கள் மற்றும் 100 குழந்தைநட்பு இணையதளங்களுக்கு எதிராக இந்த தீர்வுகளை சோதித்தது.

மேலும், பொய்யான நேர்மறைகள், கடுமையானபிழைகள் அல்லது வடிவமைப்பு குறைபாடுகள் இல்லாமல் 98% கண்டறிதல் விகிதத்தின் சான்றிதழ் அளவுகோல்களைதீர்மானித்தது.

AVTEST பெற்றோர் கட்டுப்பாட்டு சோதனை 2023 முடிவுகள் Kaspersky Safe Kids ஆனது வலுவான செயல்திறனைக்காட்டியுள்ளது, குறிப்பாக Adult Contentஐ தடுக்கும் திறனில், Windows இயங்குதளத்தில், இந்த பயன்பாடு Adult Contentக்கு100% தடுப்பு விகிதத்தை பதிவு செய்துள்ளது, இது 2021 மற்றும் 2023ஆம் ஆண்டுகளிலும் இந்த முடிவை அடைந்த ஒரே விற்பனையாளராக இதனை குறிக்கிறது. மேலும், இந்த தீர்வுவன்முறை மற்றும் சூதாட்டம் போன்ற பிற முக்கியமானபிரிவுகளுக்கு எதிராக 92.20% என்ற ஒட்டுமொத்த சராசரி தடுப்புவிகிதத்துடன் திடமான முடிவுகளைக் காட்டியது. Android இயங்குதளத்தில், Kaspersky Safe Kids ஆனது Adult Contentஇற்கு 99.09% தடுப்பு விகிதத்தை அடைந்துள்ளது.

## CANDY சலவை இயந்திரங்கள் மற்றும் குளிர்சாதன பெட்டிகளை அறிமுகப்படுத்தும் Singhagiri

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கையில் நீடித்த பயன்பாட்டு பொருட்களுக்கான முன்னணி நிறுவனமாக விளங்கும் Singhagiri (Pvt) Ltd. அதன் விற்பனைத் தயாரிப்பு வரிசையில் CANDY உற்பத்திகளை இணைத்துள்ளதாக அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.



அதற்கமைய, ஒரு முன்னணி ஐரோப்பிய உபகரண வர்த்தகநாமமான CANDY யின் குளிர்சாதன பெட்டிகள் மற்றும் சலவை இயந்திரங்கள் Singhagiri காட்சியறைகளில் மாத்திரம் பிரத்தியேகமாக விற்பனை செய்யப்படவுள்ளது.

சந்தையில் காணப்படும் ஏனைய வீட்டு பயன்பாட்டு உபகரணங்களைப் போலல்லாமல், உங்களது வீட்டுக்கும், அன்றாட வாழ்க்கை முறையை எளிமையாக்க உதவும் வகையிலும், கட்டுப்படியான விலையில், தனித்துவமான மற்றும் ஸ்மார்ட் அம்சங்களை CANDY வழங்குகிறது. நுணுக்கமாக வடிவமைக்கப்பட்ட இந்த ஆடம்பரமான இத்தாலிய வர்த்தகநாமமானது, CANDY App (எளிமைப்படுத்தும் செயலி) ஊடாக கையடக்க தொலைபேசி சாதனங்கள் மூலமாகவோ அல்லது டிஜிட்டல் உதவியாளர் மூலமாகவோ அதன் உபகரணங்களை இயக்க வாடிக்கையாளர்களுக்கு வசதி அளிக்கிறது.

Singhagiri (Pvt) Ltd நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி லசந்த அல்விஸ் இது பற்றித் தெரிவிக்கையில், "எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் வழங்கும் எமது விற்பனைத் தயாரிப்புகளின் வரிசையை மேலும் அதிகரிக்கும் வகையில், CANDY போன்ற புகழ்பெற்ற வர்த்தக நாமத்தை எமது தயாரிப்புகளுடன் இணைப்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இது போன்ற கூட்டாண்மைகள் மூலம் எதிர்காலத்திற்காக நாம் வழங்கக்கூடிய தயாரிப்புகளை இணைப்பதன் மூலம், எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தீர்வுகளை வழங்குவதில் நாம் மிகவும் உறுதியுடன் உள்ளோம்.

அனைத்து சொக்லேட் விரும்பிகளுக்குமான அழைப்பு!

## மறக்க முடியாத பால் சுவையை வழங்கும் Chocolit White அறிமுகம்

பால் கலந்த சொக்லேட் (milk choco) பிரியர்களுக்கான அழைப்பு இது! Diana Chocolates (Pvt) Ltd. அதன் புதிய தயாரிப்பான Chocolit White தயாரிப்பை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறது. இது, உங்கள் நாவிற்கு இனிமையான, சுவை அரும்புகளைக் கவருகின்ற, உங்கள் இனிமையான சிறு பராய சுவை அனுபவத்தின் நினைவுகளை மீள கொண்டுவருகின்ற, செழுமையான மற்றும் கிரீம் போன்ற பால் சுவை கொண்ட White Choco ஆகும்.




இலங்கைச் சந்தையில் அறிமுகமாகும் Chocolit குடும்பத்தின் புதிய உறுப்பினரான White Choco தயாரிப்பின் சுவையை அறிய தயாராகுங்கள். இந்த மகிழ்ச்சிகரமான விருந்து, Milk choco சுவை விரும்பிகளுக்கு மிகவும் பொருத்தமானதாகும். தற்போது மகிழ்ச்சிகரமான மற்றும் கவர்ச்சிகரமான White Choco வடிவில் வருகின்ற இது கொண்டுள்ள சுவைமிக்க பால் சுவையானது, சிறுவர்கள் மற்றும் இள வயதினரை நிச்சயம் கவரும். அதனை அனுபவிக்க நீங்களும் தயாரா?

Chocolit White வெவ்வேறு milky choco தெரிவுகளை வழங்குகிறது! பகிர்ந்து உண்பதற்கு ஏற்றதான Chocolit White Slab உண்மையில் மெய் மறக்கச் செய்கின்றது. பயணத்தின் போதான மகிழ்ச்சியை பகிர Chocolit White Bar ஐ எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு நாவுறும் அம்சத்தின் ஆச்சரியத்தை விரும்புகிறீர்களா? இதற்கு, மிருதுவான white choco நிறைந்த மொறு மொறுப்பான அம்சத்தை Chocolit White Crispy Ball வழங்குகிறது.

Chocolit White அறிமுகத்துடன், அதன் வசீகரமான சுவையில் மூழ்கி, அதன் உன்னதமான பால் சுவையின் மகிழ்ச்சியை மீண்டும் அனுபவியுங்கள்!

## Sustainable Fitch இடமிருந்து இரண்டாம் தரப்புக் கருத்தை பெறும் கொமர்ஷல் வங்கியின் பசுமை திட்டப்பணி

சுற்றாடல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) தொடர்பான மதிப்பீடுகளை வழங்கும் ஃபிட்ச் சொல்யூஷன்ஸ் நிறுவனமான Sustainable Fitchஇலிருந்து, இலங்கையின் கொமர்ஷல் வங்கி உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இரண்டாம் தரப்புக் கருத்தை (SPO) வங்கியின் நிலைபெறுதகு பிணைய திட்டப்பணிக்காக பெற்றுள்ளது.

SPO என்பது சர்வதேச மூலதன சந்தைகள் சங்கத்தின் (ICMA) பசுமைப் பிணைய கோட்பாடுகள் 2021 உடன் இணைந்த மூன்றாம் தரப்புக்கான அங்கீகாரம் ஆகும். SPO இன் பற்றுச்சீட்டானது பாலின சமத்துவம் மற்றும் சமத்துவத்தை ஆதரிக்கும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக திட்டங்களுக்கு நிதி திரட்டுவதற்கு வங்கிக்கு உதவுகிறது.

வங்கியின் நிலைபெறுதகு பிணைய திட்டப்பணிக்காக (Sustainable Green Bond) பெறப்பட்ட SPO பற்றி கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க கருத்து தெரிவிக்கையில்; நிலைபெறுதகு தன்மையின் மீதான எங்கள் கவனம் தற்போது மெய்நிகர் ரீதியில் ஒவ்வொரு செயல்பாட்டு அம்சத்தையும் உள்ளடக்கியதுடன் மற்றும் நிலையான பிணையப் பத்திரம் வழங்குவது வங்கியின் நிலைத்தன்மையை நோக்கிய பயணத்தில் அடுத்த மைல்கல்லை குறிக்கும். இந்த நோக்கத்திற்காக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பிணையப் பத்திர கட்டமைப்பை நாங்கள் பெற்றிருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைவதுடன் மேலும் எங்கள் நிலைபெறுதகு தன்மைக்கான வரைபடத்திற்கான அவர்களின் உதவி மற்றும் பங்களிப்பிற்காக GGGIமற்றும் Sustainable Fitch ஆகியோருக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.'

கொமர்ஷல் வங்கியின் திட்டப்பணியின் கீழ் தகுதியான பசுமைத் திட்டங்களில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்; பசுமை கட்டிடங்கள்; சுத்தமான போக்குவரத்து; வாழ்க்கை வளங்கள் மற்றும் நில பயன்பாட்டிற்கான சுற்றுச்சூழல் ரீதியிலான நிலையான முகாமைத்துவம்;, நிலையான நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவம் காலநிலை மாற்றம் ஆற்றல் திறன்; மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு; மற்றும் சுற்றுப்பொருளாதாரம் தழுவிய தயாரிப்புகள், உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் செயல்முறைகள் என்பன உள்ளடங்குகின்றன.

# நகர்வலம்



## பேருவளை அப்ரார் கல்வி நிலைய புலமைப் பரிசில் வழங்கும் விழா!







(பேருவளை : பீ.எம் முக்தார்)

தினகரன், தினகரன் வார மஞ்சரி மற்றும் பேருவளை நியூஸ் ஊடக வலையமைப்பின் ஊடக அனுசரணையில் வெகுசிறப்பாக நடைபெற்ற பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின், குறைந்த வருமானம் பெறும் திறமையான மாணவர்களுக்கான 11 ஆவது வருட புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு பேருவளை , மஹகொட ஐ.எல்.எம் சம்சுதீன் வித்தியாலய கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கல்வி நிலையத்தின் தவிசாளர் எம்.ஜே.எம் நிஸாமின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக ஓமான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் அஹமத் பின் அலி பின் சயீத் அலி ராஷிதி மற்றும் பலஸ்தீன நாட்டின் இலங்கைக்கான பதில் தூதுவர் ஹிஷாம் அபூ தாஹாவும் கலந்துகொண்டனர்.

அப்ரார் கல்வி நிலையத்தின் போசகரும், பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்காரும் கலந்துகொண்ட இந்நிகழ்வின் விசேட பேச்சாளராக ஸம் ஸம் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி முஹம்மத் ஹிஷாம் கலந்து கொண்டு விசேட உரையாற்றினார்.

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையக இயக்குனர் சபைக் கூட்டம்



உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையக இயக்குனர் சபைக் கூட்டம் கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்றது.

50 ஆண்டுகளைக் கடந்து உலகெங்கும் இயங்கிவரும் தமிழ் அமைப்புக்களில் 'எல்லைகளற்ற' ஒரு அமைப்பாக வெற்றிகரமாக இயங்கிவரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையக இயக்குனர் சபைக் கூட்டம் அண்மையில் கனடா ஸ்காபுறோ நகரில் அதன் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம் கனடிய தேசத்தில் மத்திய அரசின் கீழும் மாகாண அரசின் கீழும் சட்ட ரீதியாகப் பதிவு செய்யப்பெற்று அதன் இலச்சினையும் (லோகோ) மத்திய அரசின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நீண்ட நாட்களின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நடா இராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த இயக்குனர் சபைக் கூட்டத்தில் ஜேர்மனியிலிருந்து இயக்கத்தின் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் கலந்து கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் தலைவர் விசு துரைராஜா (Canada), பொருளாளர் மோகன் பாலசுப்ரமணியம் (Canada), அகில முதன்மை துணைத்தலைவர் சிவா கணபதி பிள்ளை (Canada), அகில ஊடகத் துறைபொறுப்பாளர் R.N.லோகேந்திரலிங்கம் (Canada), தலைமை ஆலோசகர் பேராசிரியர் .இ. நா. பாலசுந்தரம் (Canada), துணைக் கிளைகள் ஒருங்கிணைப்பாளர் R. R. ராஜ்குமார்(Canada) ஆகியோரும் நேரடியாகக் கலந்து கொண்டனர்.

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத் தலைமையகம் என்ற பெயரில் ஒரு சில நாடுகளில் இயங்கிவரும் சில குழுக்களை தொடர்புகொண்டு அகிலத் தலைமையகத்தைக் கொண்ட கனடா அமைப்பின் அனுமதியின்றி பெயர், சின்னம் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டாம் என வேண்டுகோள் விடுக்க வேண்டுமெனவும், தேவை ஏற்படின் அவர்களோடு உரையாடுவதற்கும், மூன்று நபர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அதில் பேராசிரியர், ஈ. நா. பாலசுந்தரம், சிவா கணபதி பிள்ளை, R.N.லோகேந்திரலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இயக்கத்தின் பொன்விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு 2025ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் கனடாவில் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கு ஒன்றை நடத்துவதற்கு முயற்சி எடுக்கலாம் எனவும் அதனைத் தொடர்ந்து இலங்கையில் பொன் விழாவையும் மாநாட்டை நடத்தலாம் எனவும் தீர்மானிக்கப் பட்டது.

## புலமைப்பரிசில் கருத்தரங்கு

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடாத்தப்படும் இலவச புலமைப்பரிசில் கருத்தரங்கு எதிர்வரும் 28.07.2024 காலை 8.00 மணி முதல் 12.00 மணிவரை கொழும்பு கலைமகள் வித்தியாலயத்தில் (ஸ்டேடியம் அருகாமையில்) இந்த கருத்தரங்கானது கொட்டாஞ்சேனை கிறேண்ட் சிட்டி தலைவர் லயன் ரவிந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

04.08.2024 நடைபெறும் கருத்தரங்கு கொட்டாஞ்சேனை வட்ட அரிமா சங்கத்தின் தலைவர் பன்னீர் செல்வம் தலைமையிலும் விவேகானந்த தேசிய பாடசாலையில் காலை 8 மணி முதல் 12.00 மணிவரை நடைபெறவுள்ளது. 11.08.2024 காலை 8.00 மணி முதல் பகல் 12.00 மணிவரை தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் கிறீண் லேன் கொழும்பு பதுருதீன் முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் சமூக சேவையாளர்கள் 04 பேருக்கு பொற்பணிச்செம்மல் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் பொதுச்செயலாளர் எஸ். கே. தளையரட்ணம், கொட்டாஞ்சேனை வட்ட அரிமா சங்கத்தின் செயலாளர் தங்கவேலு ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

## அல் அஷ்ரப் மஹா வித்தியாலய பழைய மாணவ சங்க கிரிக்கெட் சுற்று போட்டி









அல் அஷ்ரப் மஹா வித்தியாலயம் பழைய மாணவ சங்க ஏற்பாட்டில் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்று போட்டி பழைய மாணவர்களுக்கிடையில் பாடசாலை அதிபர் இர்ஷாட் (நளிமி) தலைமையில் நடைபெற்றது. படத்தில் சங்கத்தின் செயலாளர் பாஹிம், உப தலைவர் நதீர், பொருளாளர் ரிமஸ், விளையாட்டு குழு தலைவர் ஷிபான் மற்றும் உஷாமா மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் காணப்படுகின்றனர். போட்டியில் சிறப்பு விருந்தினர் மற்றும் அனுசரணையாளர்களான வத்தளை, மாபோளை முன்னாள் பிரதி தலைவர் தாஹிர் ரிஷான், தொழில் அதிபரான ஆசியன் கார்கோ உரிமையாளர் ரிபாஸ் நபீல், மற்றும் தொழில் அதிபர் ரியாஸ் (SI Motors) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## 863 ஆவது அறிவோர் ஒன்றுகூடல்





கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் 863 ஆவது அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த புதன்கிழமை கிழமை மாலை சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இந்து சமய கலாசார திணைக்கள அதிகாரி திருமதி பவானி முகுந்தன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழித்துறை விரிவுரையாளர் ஜனாப் எம் அப்துல் றஸாக் "இணையத்தள எழுத்துக்கள் புதிய தலைமுறையின்

இலக்கிய உலகு" என்னும் பேசு பொருளில் உரையாற்றுவதையும் கலந்து கொண்டோரையும் காணலாம்.

## தமிழ்தின போட்டிகள்

(உடப்பு குறூப் நிருபர்)



புத்தளம் தெற்கு கோட்டத்தின் தமிழ்தின போட்டிகள் ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இப்போட்டிகள்

புத்தளம் வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. ஆ.கமலேந்திரன் (தமிழ் பிரிவு) தலைமையில் நடைபெற்றது. புத்தளம் தெற்கு கோட்டத்திற்கு உட்பட்ட 22 பாடசாலை மாணவர்கள் இதில் பங்கு பற்றி தமது திறமைகளை வெளிக்காட்டினார்கள். வரவேற்பு மற்றும் விருந்து உபசரிப்புக்காக பாடசாலையின் ஆசிரியர்களோடு,

அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் தமது ஒத்துழைப்பினை வழங்கி இருந்தனர். அத்துடன்

பு/ ஒற்றைப்பனை ரோமன் க. வி. அதிபர் திரு. சிவானந்த குமாரன் இ புº ஸ்ரீ கிருஷ்ணா ஆரம்ப பாடசாலையின் அதிபர் திரு. S.கோகிலகாந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவிலில் ஸ்ரீமந் நாராயண திருக்கல்யாணம்



வெள்ளவத்தை, மயூரா பிளேஸ், மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவில் மண்டபத்தில் இன்று 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணி முதல் 7 மணி வரை ஸ்ரீயபதி பெருமான் ஸ்ரீமந் நாராயணனுக்கு திருக்கல்யாண மஹோத்சவம் நடைபெறும். ஹைதராபாத் ரெகோன் சர்வதேச அமைப்பு ஏற்பாட்டில் இலங்கை ஸ்ரீகிருஷ்ணாகமுகம் நடத்தும் இவ்விழாவுக்கு இந்தியாவிலிருந்து பூசகர்களும் வருகை தரவுள்ளனர்.

இன்று 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 7:30 முதல் கோபூஜை புன்யாகவசனம், சாந்தி ஹோமம், மஹா பூர்னாஹூதி நடைபெற்று மதியம் 12 மணி வரை கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். நண்பகல் 12 மணி முதல் அன்னதானம் வழங்கப்படும். மாலை 4.00 மணி முதல் 7.00 மணிவரை ஸ்ரீநிவாசக் கல்யாணம் நடைபெறும்.

இவ்விழாவில் இலங்கை வாழ் பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீமந் நாராயணனின் திருவருளைப் பெற்று பல்லாண்டு வாழ பிரார்த்திக்கிறோம்.

## Junior Super Singer போட்டி, பருத்தித்துறை, வல்லை, யாழ் பீச் ஹோட்டலில்



வட மாகாண Junior Super Singer போட்டி, பருத்தித்துறை, வல்லை, யாழ் பீச் ஹோட்டலில் இன்றும் நாளையும் நடைபெற இருக்கிறது. இதற்கான நேர்முகத் தேர்வுக்குரிய ஆரம்பகட்ட வேலைகள் நேற்று ஆரம்பித்து வைத்தபோது பிடிக்கப்பட்ட படம்.

# ஆசிய கிண்ண டி20 இறுதிக்கு இந்திய மகளிர் முன்னேற்றம்



பங்களாதேஷ் அணியை 10 விக்கெட்டுகளால் இலகுவாக வீழ்த்திய இந்திய மகளிர் அணி மகளிர் ஆசிய கிண்ண டி20 தொடரின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

தம்புள்ளையில் நேற்று நடைபெற்ற முதல் அறையிறுதிப் போட்டியில் ஆடிய பலம்மிக்க இந்திய மகளிர் அணி நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த பங்களாதேஷ் அணியை 80 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்தியது. அந்த அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து குறைவான ஓட்டங்களையே பெற்றது.

ரேனுகா சிங் மற்றும் ராதா யாதவ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதன்போது பங்களாதேஷ் அணியின் இருவர் மாத்திரமே இரட்டை இலக்க ஓட்டங்களை பெற்றனர்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 11 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 83 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. ஸ்மிரித்தி மந்தனா 39 பந்துகளில் 9 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களை பெற்றார்.

மகளிர் ஆசிய கிண்ண டி20 தொடரின் இறுதிப் போட்டி நாளை இதே தம்புள்ளை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# புதிய மாற்றங்களுடன் இலங்கை-இந்திய டி20 தொடர் இன்று பல்லேகலவில் ஆரம்பம்

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடரின் முதல் போட்டி இன்று (27) பல்லேகலவில் நடைபெறவுள்ளது.

டி20 உலகக் கிண்ணத்திற்கு பின்னர் இலங்கை அணி பங்கேற்கும் முதல் தொடர் இது என்பதோடு இரு அணிகளும் புதிய தலைவர், புதிய பயிற்சியாளரின் கீழ் முதல் முறை களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. வனிந்து ஹசரங்க அணித் தலைமை பதவியில் இருந்து விலகிய நிலையில் சரித் அசலங்க தலைவராக செயற்படவிருப்பதோடு சனத் ஜயசூரிய இடைக்கால பயிற்சியாளராக செயற்படுகிறார்.

மறுபுறம் டி20 உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியின் தலைவர் ரோஹித் ஷர்மா டி20 சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்ற நிலையில் புதிய தலைவராக சூர்யகுமார் யாதவ் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோன்று இந்திய அணியின் புதிய பயிற்சியாளராக கௌதம் காம்பீர் நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவரின் பயிற்சியின் கீழ் ஆடும் முதல் தொடராகவும் இது அமையவுள்ளது.

இந்நிலையில் இந்தியத் தொடருக்கான இலங்கை குழாத்தில் இருந்து வேகப்பந்து வீச்சாளர்களான துஷ்மன்த சமீர சுகவீனம் காரணமாகவும் நுவன் துஷார உபாதை காரணமாகவும் கடைசி நேரத்தில் விலகியது பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.



இவர்களுக்கு பதில் வேகப்பந்து வீச்சாளர்களான அசித்த பெர்னாண்டோ மற்றும் டில்ஷான் மதுஷங்க அழைக்கப்பட்டுள்ளனர். அண்மையில் நடந்த லங்கா பிரீமியர் லீக் தொடரில் சோபித்த அனுபவ வீரர்களான தினேஷ் சந்திமால், குசல் ஜனித் பெரேராவுடன் வேகப்பந்து வீச்சாளர் பினுர பெர்னாண்டோ மற்றும் இளம் சகலதுறை வீரர் சமிந்து விக்ரமசிங்க அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை அணி இந்தியாவை கடைசியாக ஒருநாள் போட்டிகளிலேயே எதிர்கொண்டதோடு அதிலும் கடைசியாக ஆடிய இரண்டு போட்டிகளிலும் முறையே 55 மற்றும் 51 ஓட்டங்களுக்கு சுருண்டு படுதோல்விகளை சந்தித்த நிலையிலேயே இன்று களமிறங்கவுள்ளது.

எனினும் சொந்த மைதானத்தில் ஆடும் இலங்கை கடந்த கால பின்னடைவை சுதாகரித்து ஆடுவது கட்டாயமாக உள்ளது.

## சர்வதேச செய்திகள்



# வடக்கு, தெற்கு காசாவில் இஸ்ரேலின் புதிய தாக்குதல் அலையில் பலர் பலி

## போரை நிறுத்த நெதன்யாகுவுக்கு கமலா ஹாரிஸ் அழுத்தம்

காசாவில் வடக்கு மற்றும் தெற்கில் இஸ்ரேல் புதிய தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் அங்குள்ள மக்கள் படும் வேதனையை பார்த்து அமைதி காக்க முடியாது என்றும் போர் நிறுத்தம் ஒன்று எட்டப்பட வேண்டும் என்றும் அமெரிக்க துணை ஜனாதிபதியும் ஜனநாயகக் கட்சியில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட எதிர்பார்த்திருப்பவருமான கமலா ஹாரிஸ், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் கடுமையான தொனியில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சென்றிருக்கும் நெதன்யாகு அந்நாட்டு பாராளுமன்றத்தில், காசாவில் நடத்தும் போரை நியாயப்படுத்தி பேசிய நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் கமலா ஹாரிஸை தனித்தனியே சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

வொஷிங்டனில் நெதன்யாகுவை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கமலா, இஸ்ரேலின் இருப்பு மற்றும் பாதுகாப்பு மீதான தமது கடப்பாடு உறுதியானது என்றபோதும், போரினால் அளவுக்கு அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றார்.

'காசாவில் கடந்த ஒன்பது மாதங்களாக இடம்பெறுவது அழிவுகரமானது. இறந்த குழந்தைகள் மற்றும் விரக்தியடைந்த, பட்டினியில் உள்ள மக்கள் பாதுகாப்புத் தேடி சில நேரங்களில் இரண்டு, மூன்று அல்லது நான்கு தடவைகள் இடம்பெயர்ந்து செல்லும் படங்களை காண்கிறோம்' என்றும் கமலா குறிப்பிட்டுள்ளார்.

'இந்த அவலங்களை எம்மால் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. துன்பங்களுக்கு மத்தியில் நாம் உணர்ச்சியற்றவர்களாக இருக்க முடியது. நான் அமைதியாக இருக்க மாட்டோன்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் இருந்து பதவியில் உள்ள ஜனாதிபதி ஜோ பைடன் விலகியதை அடுத்தே கமலா ஹாரிஸ் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அவருக்கு ஜனநாயகக் கட்சியில் ஆதரவு வலுத்து வருகிறது.

இந்நிலையில் நெதன்யாகுவை சந்தித்த அவர், இஸ்ரேல்–காசா விவகாரத்தில் பைடனை விட கடுமையான தொனியில் பேசியுள்ளார்.

'இந்தப் போர் முடிவுக்கு வர வேண்டிய நேரம் வந்திருப்பதோடு அனைத்து பணயக்கைதிகளும் விடுவிக்கப்பட்டு, காசாவில் பலஸ்தீன மக்களின் வேதனை முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, பலஸ்தீன மக்களின் சுதந்திரம், கண்ணியம் மற்றும் சுயநிர்ணய உரிமையை செயற்படுத்தி, இஸ்ரேலை பாதுக்காக்கும் வகையில் அது முடிவுக்கு வரவேண்டும்' என்று அவர் வலியுறுத்தினார்.

இஸ்ரேலின் தற்காத்துக்கொள்ளும் உரிமைக்கு ஆதரவு வழங்குவதாகவும் வலியுறுத்திய கமலா, ஹமாஸ் அமைப்பை கொடிய பயங்கரவாத அமைப்பு என்று கண்டித்தார்.

கடந்த காலங்களில் இஸ்ரேலுக்கு வலுவான ஆதரவை வழங்கி வந்தவராக பார்க்கப்படும் கமலா ஹாரிஸ், 2017 இல் செனட் உறுப்பினராக தனது முதல் விஜயத்தில் இஸ்ரேலுக்கு பயணித்திருந்தோடு இஸ்ரேலைக் கண்டிக்கும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானத்திற்கு எதிராக செனட்டில் தீர்மானம் ஒன்றையும் கொண்டுவந்தவராவார்.

எனினும் காசா போரை ஒட்டி ஜனநாயகக் கட்சிக்குள் பெரும் பிளவு ஏற்பட்டிருப்பதோடு போரில் இஸ்ரேலுக்கு வழங்கி வரும் ஆதரவுக்கு கட்சிக்குள் எதிர்ப்பு வலுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி பைடனையும் நெதன்யாகும் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தப் பேச்சுவார்த்தையின்போது காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு நெதன்யாகுவுக்கு பைடன் அழுத்தம் கொடுத்ததாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கப் பாராளுமன்றத்தில் நெதன்யாகு உரை நிகழ்த்திய ஒரு நாளுக்குப் பின்னரே இந்த சந்திப்புகள் இடம்பெற்றன.

ஹமாஸுக்கு எதிராக 'முழு வெற்றி'க்கு உறுதி பூண்டுள்ளதாக பாராளுமன்ற உரையில் நெதன்யாகு கூறினார். அவர் உரை நிகழ்த்தியபோது ஆயிரக்கணக்கான பலஸ்தீன ஆதரவாளர்கள் வெளியில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இஸ்ரேல்–காசா போர் ஒன்பது மாதங்களுக்கு மேல் தொடர்ந்து வரும் நிலையில், இந்தப் போரை நிறுத்த உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நெதன்யாகு அழுத்தத்தை எதிர்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



எனினும் காசாவில் இஸ்ரேலின் போர் விமானங்கள் நேற்றும் சரமாரித் தாக்குதல்களை நடத்தின. இதில் தெற்கு நகரான கான் யூனிஸ், மத்திய காசாவில் புரைஜ் அகதி முகாம் மற்றும் வடக்கில் காசா நகரங்கள் இலக்கு வைக்கப்பட்டன.

காசா நகரின் கிழக்கில் அல் சஹ்ராப் பகுதியில் நேற்று முன்தினம் நடத்திய வான் தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர். அல் பன்னா குடும்பத்திற்குச் சொந்தமான வீடு உட்பட இரு வீடுகளை இலக்கு வைத்து நடத்திய தாக்குதல்களிலேயே இவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தவிர காசா நகரின் அல் தராஜ் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று தாக்குதல் நடத்தியதாகவும் அங்கு உயிரிழப்புகள் இடம்பெற்றிருப்பதாகவும் பலஸ்தீன செய்தி செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

மத்திய காசா நிர்வாகப் பகுதியில் பல குடியிருப்புக் கட்டடங்களை இஸ்ரேலியப் படை இடித்துத் தகர்த்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக கான் யூனிஸில் மீண்டும் படை நடவடிக்கையை இஸ்ரேல் தீவிரப்படுத்தி இருக்கும் நிலையில் கடந்த ஒருசில நாட்களில் அங்கு நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதோடு ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தப்பது.

அதேபோன்று காசாவில் எகிப்துடனான எல்லையில் உள்ள ரபா நகரிலும் கடந்த மே ஆரம்பம் தொடக்கம் இஸ்ரேல் தரைவழி படை நடவடிக்கையை முன்னேடுத்து வரும் நிலையில் பலஸ்தீன போராளிகளிடம் இருந்து தொடர்ந்து எதிர்ப்பை சந்தித்து வருகிறது.

ரபா எல்லைக் கடவையில் நிலைகொண்டிருக்கும் இஸ்ரேலியப் படையினர் மற்றும் வாகனங்கள் மீது மோட்டார் குண்டு தாக்குதல்களை நடத்தியதாக பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு நேற்று குறிப்பிட்டிருந்தது. கான் யூனிஸ் கிழக்குப் பகுதியில் இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் டாங்கி எதிர்ப்பு செல்களை பயன்படுத்தி இஸ்ரேலிய படையுடன் கடும் மோதலில் ஈடுபட்டதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் இதுவரை 39,200 பேர் வரை கொல்லப்பட்டிருப்பதோடு 90,000இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளர்.

இந்தப் போரினால் காசாவில் உள்ள 10 பேரில் ஒன்பது பேர் இடம்பெயரச் செய்யப்பட்டிருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் தெரிவித்துள்ளது.

'மக்கள் நிரம்பி வழியும் பாடசாலைகள், உடைந்த கட்டடங்கள், மணல் அல்லது குப்பைகளுக்கு இடையே இருக்கும் தற்காலிக கூடாரங்களில் குடும்பங்கள் அடைக்கலம் பெற்றுள்ளன. இங்கு எந்த ஒரு இடமும் பாதுகாப்பானதாக இல்லை. மக்கள் செல்வதற்கும் இடமில்லை' என்று அந்த நிறுவனம் எக்ஸ் சமூகதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் குறிப்பிட்டுள்ளது.

# மக்ரன் பல்கலையின் மாணவர் கோரிக்கை



பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்திலுள்ள மக்ரன் பல்கலைக்கழகத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்கலைக்கழக வளாகத்தில் குடிநீர் வசதியின்மை, மின்சாரம் துண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மின் பிறப்பாக்கிகளை இயக்க பல்கலைக்கழக நிர்வாகம் தவறுகின்றமை உள்ளிட்ட காரணங்களால் கடும் வெப்ப காலநிலை நிலவும் தற்போதைய சூழலில் அதிக அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மாகாண ஆளுநரின் கவனத்திற்கும் கொண்டு சென்றிருப்பதாகவும் மாணவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ஒலிம்பிக் இடையே பிரான்ஸ் ரயில்கள் மீது நாசகார தாக்குதல்கள்: பலரும் நிர்க்கதி

பாரிஸ் ஒலிம்பிக் போட்டி ஆரம்பிப்பதற்கு சில மணி நேரத்திற்கு முன்னர் பிரான்ஸில் அதிவேக ரயில் சேவை வலையமைப்பு மீது நேற்று (26) ஒருங்கிணைந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான துருப்புகள் மற்றும் பொலிஸார் நிலைநிறுத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்து நிலையிலேயே இந்த நாசவேலை இடம்பெற்றுள்ளது.

இதனால் தீவைப்பில் ஈடுபட்டவர்களால் பாரிஸ் நகரில் ரயில் சமிக்ஞை பெட்டிகள் மற்றும் இணைப்புகள் சேதமடைந்திருப்பதாக அரசுக்குச் சொந்தமான ரயில் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதனால் நூற்றுக்கணக்கான பயணிகள் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் ரயில் சேவைகளை பாதிக்கச் செய்யும் வகையில் மர்ம கும்பல் பல்வேறு ரயில் சேவை



வழித்தடங்களில் சட்டவிரோத செயலில் ஈடுபட்டுள்ளதாகவும், இதனால் பல இடங்களில் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டும், துண்டிக்கப்பட்டு உள்ளதாகவும் அது கண்டனத்திற்கு உரியது என்றும் அந்நாட்டின் ரயில்வே அமைச்சர் பேட்ரிஸ் வெர்கிரிட் தெரிவித்துள்ளார். 33ஆவது ஒலிம்பிக் போட்டி நேற்று பாரிஸில் கோலாகலமாக ஆரம்பமானது என்பது குறிப்பிடத்தக்கது.

# கமலா ஹாரிஸுக்கு பராக் ஒபாமா ஆதரவு



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா ஜனநாயகக் கட்சியின் புதிய ஜனாதிபதி வேட்பாளராகத் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் நிற்பதற்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஒபாமாவும் அவரது மனைவி மிஷெல் ஒபாமாவும் சேர்ந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில், 'இந்த முக்கியமான தருணத்திற்குத் தேவையான தொலைநோக்குப் பார்வை, குணநலன், வலிமை ஆகியவை ஹாரிஸிடம் உள்ளன' என்று அவர்கள் கூறினர்.

ஜனாதிபதி ஜோ பைடன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று அறிவித்த பின்னர் கமலா ஹாரிஸ் 100க்கும் அதிகமான பேராளர்களைக் சந்தித்தார். அவர்களில் ஒபாமாவும் ஒருவர் என்று கூறப்படுகிறது.

லோரன்ஸ் செல்வநாயகம்

# IGP யின் பணி இடைநிறுத்த உத்தரவை வலுவற்றதாக்கவும்

## சபாநாயகரிடமும் பாராளுமன்றத்திடமும் பிரதமர் கோரிக்கை

பிரதமர் என்ற ரீதியில் இன்று பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் சார்பில் இந்த விசேட பிரகடனத்தை செய்ய எதிர்பார்க்கிறேன். கௌரவ சபாநாயகர் அவர்களே, நீங்கள் பாராளுமன்றத்தில் இருக்கும் இந்த தருணம் மிகவும் முக்கியமான தருணமாகும். நம் நாட்டு மக்களுக்கும், நாட்டின் அரசியலமைப்புக்கும், பாராளுமன்றத்துக்கும் இது முக்கியமானது. பாராளுமன்றம் தனது மேன்மையை காப்பாற்றிக் கொள்ள செயற்பட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன.

எனவே, இன்றைய இந்த நிலைமைக்கு வழிவகுத்த இலங்கைப் பொலிஸ் மா அதிபர், பெயர், ஊர் விபரங்களை குறிப்பிட நான் முயற்சிக்க வில்லை. அவர் பொலிஸ் மா அதிபராக பதவி வகித்த போது, பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான விடயங்கள் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முழு அதிகாரம் கொண்ட தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்புடன் செயற்பட்டார். பொலிஸ் மா அதிபரை பணியிலிருந்து இடைநீக்கம் செய்து உயர் நீதிமன்றம் கடந்த ஜூலை 25ஆம் திகதி இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. மேலும், அது குறித்த அடுத்தகட்ட விசாரணை நவம்பர் பதினோராம் திகதிக்கு நாள் குறிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதம் பதினொன்றாம் திகதி நடைபெறும் என்பது முழு நாட்டிற்கும் தெரியும். புதிய ஜனாதிபதி பதவியேற்க உள்ளார். அதுவரை நமது நாட்டின் தேர்தல் ஆணைக்குழுவுடன் பொலிஸ் மா அதிபர் செயற்பட்ட விதம், நமது நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக அவருக்கு அளிக்கப்பட்ட முக்கியப் பணியை இடைநிறுத்துவது போன்ற முடிவும் நாடாளுமன்றத்திற்குள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சில விடயங்களை மட்டும் நான் இங்கு முன்வைக்கிறேன். அரசியலமைப்பில் பல அடிப்படை உரிமை வழக்குகள் உள்ளன. அது பற்றிய விவரங்களை ஹன்சார்ட் பதிவுக்காக இங்கு முன்வைக்கலாம். கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசியலமைப்பின் 4 ஆவது சரத்தின்படி, வாக்குரிமை என்பது மக்களின் இறையாண்மையின் ஓர் அங்கமாகும். எனவே, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் நோக்கங்கள் அரசியலமைப்பின் 103(2) வது பிரிவில் கூறப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் மேற்படி மனு மீது இறுதித் தீர்ப்பை வழங்கும் வரை நடைமுறையில் இருக்கும் இந்த தடை உத்தரவு முறையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் 2024 நவம்பர் 11 வரை தடை உத்தரவு அமல்படுத்தப்படும் என்ற தற்போதைய சூழ்நிலையின் விளக்கத்தின் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தின் அறிவிப்பு அமைந்துள்ளது. இதன் போது தேர்தல் ஆணைக்குழுவின் கருத்துகள் பெறப்படவில்லை. அரசியலமைப்பின் பிரிவு 41(இ)II இன் கீழ், ஜனாதிபதியின் பரிந்துரையின் பேரில் அரசியலமைப்பு பேரவை அங்கீகரிக்காத வரை, 14 நாட்களுக்கு மேல் தொடர்ந்து பொலிஸ் மா அதிபராக பணியாற்றுவதற்கு எவரையும் நியமிக்க முடியாது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இவ்வாறான நிலையில், தற்போதைய ஜனாதிபதியும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும்போது, பதில் பொலிஸ் மா அதிபர் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படுவார்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இன்று காலை ஜனாதிபதித் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. செப்டம்பர் மாதம் வரை வேட்புமனு தாக்கல் செய்யும் திகதியும் வாக்களிக்கும் திகதியும் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இவ்வாறானதொரு சூழ்நிலையில் அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர், அரசியலமைப்பின் 41(இ)



பிரிவின் கீழ் ஜனாதிபதி பொலிஸ் மா அதிபரை நியமிப்பார். பாராளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று, தற்போதைய பொலிஸ் மா அதிபரை பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னரேயே, சட்டப்பூர்வமாக நீக்கும் அதிகாரம் கிடைக்கும். கௌரவ அவைத் தலைவரும் அதை நேற்று சுட்டிக் காட்டினார்.

தற்போதுள்ள சட்டத்தில் ஜனாதிபதிக்கு பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்க எந்த ஏற்பாடும் இல்லை. ஏற்பாடுகள் ஏதும் இல்லாததால், ஜனாதிபதி வேறு ஒருவரை பதில் பொலிஸ் மா அதிபராக நியமிப்பார் என உயர் நீதிமன்றம் எதிர்பார்க்க முடியாது. இந்நிலையில், பொலிஸ் கட்டளைச் சட்டத்தை ஆரம்பம் முதல் இறுதி வரை படியுங்கள். நான் பொலிஸ் கட்டளைச் சட்டத்தை சபையில் முன்வைக்கிறேன். தெரியாவிட்டால் சென்று படியுங்கள். கடந்த முறையும் முன்னைய பொலிஸ் மா அதிபர் தொடர்பில் நாம் இந்த பிரச்சினையை எதிர்கொண்டோம்.

அதனால்தான் பொலிஸ் மா அதிபரை திடீரென பதவி நீக்கம் செய்ய முடியாது. அப்படி முடியும் என்று நினைப்பவர்களும் உண்டு. ஆனால் அப்படி செய்ய முடியாது. உயர்நீதிமன்றம் தற்போதுள்ள சட்டத்தையே பின்பற்ற வேண்டும். எனவே, பொலிஸ் கட்டளைச் சட்டம், மேற்படி பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் விதிகளின் நிர்வாகத்தை பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைத்துள்ளது. பொலிஸ் மா அதிபர் தனது பணிகளைச் செய்வதைத் தடை செய்ய எந்த சட்ட விதிகளும் இல்லை. எனவே, பொலிஸ் மா அதிபரின் கடமைகளை நிறைவேற்றுவதைத் தடுக்கும் வகையில் ஜனாதிபதியால் பதில் நியமனம் வழங்க முடியாது.

முன்னாள் பொலிஸ் மா அதிபரே இன்னும் அந்தப் பதவியை வகிக்கிறார். பதவி வெற்றிடமாக இல்லை.

பல்வேறு வியாக்கியானங்கள் செய்யப்படுகின்றன. அத்துடன், பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்பட்ட அரசியலமைப்பு சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்ட விதம் குறித்தும் பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால் கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசியலமைப்புச் சபை பாராளுமன்றத்தின் கீழ் உள்ளது. பாராளுமன்றத்திற்கு சமாந்தரமானதே சட்டவாக்கம். இது பாராளுமன்றத்தின் நீட்சியாகும், அப்படியானால் பாராளுமன்றம் எதிர்பார்க்கும் விதத்தில் முழு பாராளுமன்றமே தலையிட வேண்டும். எனவே தான் அரசியலமைப்பு சபையின் எந்த முடிவும் அரசியலமைப்புச் சபையின் முடிவாக மாறுகிறது. அது பாராளுமன்றத்தின் விருப்பத்தை தெரிவிப்பதாகும். அரசியலமைப்புச் சபையின் முடிவுகள் பாராளுமன்றக் கட்டுப்பாட்டிற்கு மட்டுமே உட்பட்டவை. அரசியலமைப்புச் சபையின் செயல்முறைகள் மற்றும் தீர்மானங்களில் பாராளுமன்றத்தைத் தவிர வேறு எந்த நிறுவனமும் செல்வாக்கு செலுத்த முடியாது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, பலர் எண்களின் கூட்டுத்தொகையை கூட்டிக் கழித்தல் பற்றி வியாக்கியானம் செய்கின்றனர். நான் அதைப் பற்றி பேசவில்லை. அப்போது பேசவும் இல்லை. அரசியலமைப்புச் சபையின் உள்ளகத் தீர்மானங்கள் வெளிப்புறமாக எடுக்கப்பட மாட்டாது என்பதில் அரசியலமைப்புச் சபையின் உறுப்பினர்கள் என்ற வகையில் நாங்கள் தெளிவாக உள்ளோம். எதிர்க்கட்சித் தலைவரும் உடனிருந்தார். நானும் அங்கே இருந்தேன். கௌரவ சபாநாயகர் இதன் தலைவராக உள்ளார். அதிகாரபூர்வ தலைவர். மற்ற உறுப்பினர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எனவே, அவ்வாறு எடுக்கப்பட்ட முடிவை மாற்றும் வகையில், இலங்கையில் சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மூன்று துறைசார்ந்தவர்கள் அடங்கிய அரசியலமைப்புச் சபைக்கு இந்த உறுதிப்படுத்தல் அதிகாரத்தை நாடாளுமன்றம் வழங்கியுள்ளது.

அரசியலமைப்புச் சபையின் ஒப்புதல் அதிகாரம் சட்டவாக்கச் செயல்பாடு என்பதால், அரசியலமைப்புச் சபையின் பணிகளை நீதிமன்றம் ஆராய முடியாது. பாராளுமன்றம் உச்சமானது. அரசியலமைப்பு சபையின் அதிகாரத்தை நீதிமன்றத்தால் கேள்விக்குட்படுத்த முடியாது என்பதை மீண்டும் உறுதியளிக்கிறேன். எனவே, அரசியலமைப்புச் சபையின் விவகாரங்களை விசாரிக்கவோ, உத்தரவிடவோ உயர் நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை. எனவே, தடை உத்தரவு சட்டரீதியாக செல்லுபடியற்றது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசியலமைப்புச் சபை கூடும் போது, அரசியலமைப்புச் சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களில் பெரும்பாலும் முழுமையான ஒருமித்த கருத்து இருக்கும். எங்கள் மற்ற உறுப்பினரின் பெயரை நான் குறிப்பிடவில்லை. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி கௌரவ நிமல் சிறிபால டி சில்வா ஆவார். மேலும் பிரதமரின் பிரதிநிதியாக எமது திரு. சாகர காரியவசம் அவர்கள் இருக்கிறார். திரு.கபீர் ஹாசிம் அவர்கள் எமது எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதி. இவர்கள் அனைவரும் பல்வேறு நெருக்கடி நிலைகளை அனுபவித்து நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள்.

மீண்டும் அரசியலமைப்பு பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பிரிவு 4(இ) இன் கீழ், பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள், அதிகாரங்கள் குறித்த அதிகாரங்கள் தவிரந்து பாராளுமன்றத்தினால் நீதிமன்ற அதிகாரத்தை நீதிமன்றத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இதன் போது மக்களுக்கான நீதிமன்ற அதிகாரத்தை பாராளுமன்றம் நிறுவப்பட்ட சட்டத்தின்படி நடைமுறைப்படுத்தலாம். எனவே, பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சபைக்கு உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்களுக்கு நீதிமன்ற அதிகாரம் இல்லை. எனவே தற்போதைய பொலிஸ் மா அதிபரை நியமிப்பதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் தொடர்பில் அரசியலமைப்பு சபை எடுத்த தீர்மானத்தை உயர் நீதிமன்றத்தால் மாற்ற முடியாது என்பதுடன் அரசியலமைப்பு சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை மீண்டும் குறிப்பிட விரும்புகின்றேன். இல்லாவிட்டால், அரசியலமைப்பு சபையின் அதிகாரத்தை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கு பாராளுமன்றத்திற்கு உப்பட்ட அரசியலமைப்பு சபையை அதிகாரமற்ற நிறுவனமாக நாங்களே மாற்றிவிடுவோம். ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்பவர்கள் அரசியலமைப்பு சபையாகிய நாங்களே. சபாநாயகர் அவர்களே, நீங்கள் நாடாளுமன்றத்தின் தலைவராக இருப்பதால் தலைமை வகிக்கிறீர்கள். அந்த சிபாரிசுகளை தெரிவு செய்வது பற்றி ஜனாதிபதியின் வினவுதல்கள் குறித்து தெரிவு செய்வதற்கு அரசியலமைப்பு சபையே பரிந்துரை செய்ய வேண்டும். அரசியலமைப்பு சபையால் பின்பற்றப்படும் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு உங்களின் அறிவிப்பை அறிவிப்பதற்கான முடிவை எடுப்பது கௌரவ சபாநாயகரின் அதிகாரமும் பொறுப்புமாகும். அதைத்தான் நீங்கள் செய்திருக்கிறீர்கள். பல்வேறு வியாக்கியானங்களை வழங்குவதற்கு, சில அரசியல்வாதிகள் எமது பாராளுமன்றத்தையும் அரசியலமைப்புச் சபையையும் அவமதிக்கும் அபாயகரமான முயற்சியை மேற்கொண்டுள்ளதாகவே நான் கருதுகின்றேன்.

அரசியல்வாதிகள் இதை நகைச்சுவையாகக் கொள்ளாமல், இலங்கை பாராளுமன்றத்தின் மேன்மைக்குரிய உத்தரவுகளை வழங்கியுள்ள, கௌரவ சபாநாயகர்களில் ஒருவரான, மறைந்த அநுர பண்டாரநாயக்க அவர்களும் மிகத் தெளிவாக நீதித்துறையின் தலையீட்டால் பாராளுமன்றம் அச்சுறுத்தப்படும் சூழ்நிலையில் பாராளுமன்றத்தின் மேன்மை குறித்து வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களை எனக்கும் உங்களுக்கும் நினைவிருக்கும். அத்துடன் எமது சமல் ராஜபக்ஷ அவர்களும் அந்த தீர்மானத்தை அறிவித்திருந்தார். எனவே பாராளுமன்றம் என்ற வகையில் செய்ய வேண்டிய பணிகளை நிறைவேற்றும் வகையில் நாம் செயற்படுகின்றோம்.

மேலும், சபாநாயகர் அவர்களே, அரசியலமைப்பின் 4(ஆ) பிரிவின் கீழ், நாட்டின் பாதுகாப்பிற்கு ஜனாதிபதியே பொறுப்பு. பொலிஸ் மா அதிபர், பொலிஸ், முப்படைக்கு சமமான அதாவது விசேட அதிரடிப் படைகள் மற்றும் புலனாய்வு பிரிவுகளின் கட்டளை அதிகாரியாகவும் உள்ளார்.

இந்த இடைக்கால தடை உத்தரவு அரசியலமைப்பின் 4(ஆ) பிரிவின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் தடையாக உள்ளது. அதை நாம் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். மேற்படி தடை உத்தரவில் எந்த சட்ட அடிப்படையும் குறிப்பிடப்படவில்லை எனவே எந்தவொரு சட்ட அடிப்படையும் இன்றி வெறுமனே சட்டவிரோதமானது எனத் தோன்றும் அத்தகைய தடை உத்தரவுகளை ஏற்றுக்கொள்ளும் நிலையில் பாராளுமன்றம் இல்லை.

இறுதியாக, ஆர்வமுள்ள அரசியல் கட்சிகளால் தாக்கல் செய்யப்பட்ட பல அடிப்படை உரிமை மனுக்களுக்கும் ஆரம்ப கட்டத்திலேயே இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதை அறிந்த நிலையில் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சந்தர்ப்பம் இருந்தும் அது வழங்கப்படவில்லை. அதனால்தான் மீண்டும் நினைவுபடுத்துகிறேன். இவ்வாறான தீர்மானங்கள் ஏற்றுக்கொள்வதில்லை என்றும் பாராளுமன்றமே மேலானது என்றும், அரசியலமைப்பின் பிரகாரம் தான் செயற்படுவதாக இந்த கௌரவ சபையின் முன்னாள் சபாநாயகர் அனுர பண்டாரநாயக்க அவர்கள் வழங்கிய முடிவின் இறுதியில் இந்த பிரகடனத்தை எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நான் மிகத் தெளிவாக நிறைவேற்றுகின்றேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு மேல் பாராளுமன்றத்தின் மேன்மை பாதுகாக்கப்பட்டது.

அவ்வகையில் செயற்படுவதற்கு முன்னரும், சபைத் தலைவர் குறிப்பிட்டுள்ளவாறு அரசியலமைப்பின் 4(இ) பிரிவின் கீழ் எமக்கு உள்ள அதிகாரத்தைப் பாதுகாக்கும் வகையில் முழு அரசாங்கமும் அதேபோன்று பாராளுமன்றத்தில் அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும். பாராளுமன்றத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் மாற்றும் தற்காலிக மகிழ்ச்சியை எதிர்பார்க்கின்றவர்கள் ஏற்படுத்த நாடும் கடுமையான மற்றும் ஆபத்தான குற்றத்தை நான் உங்களுக்கு மீண்டும் நினைவூட்டுகிறேன். சபாநாயகர் என்ற முறையில் நீங்கள் கொடுத்த இந்த முடிவுகளையெல்லாம் கேலி செய்துள்ளீர்கள்.

உங்கள் முடிவு கேள்விக்குள்ளாக்கப்பட்டது மட்டுமல்லாமல் கேலிக்குரியதாக்கப்பட்டுள்ளது. பொலிஸ் மா அதிபர் தொடர்பான அரசியலமைப்பு சபையின் தீர்மானத்தை கேலி செய்து நீங்கள் அனுப்பிய கடிதத்தின் படி தீர்மானத்தை மேற்கொண்ட ஜனாதிபதியை கேலி செய்பவர்களாக இவர்கள் மாறியுள்ளனர். அரசியலமைப்பு சபை பாராளுமன்றத்தின் முக்கிய பகுதிகளில் ஒன்றாகும். இந்த பாராளுமன்றமே அதை உருவாக்கியது, நியமித்தது மற்றும் அதற்கான அதிகாரங்களை வழங்கியது. உங்கள் தலைமையில் கூடும் அரசியலமைப்புச் சபைக்கு இவ்வாறு செயற்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காதிருப்பதற்காக இந்த நடவடிக்கைகளில் இறங்குவது ஆபத்தான நிலைமையாகும். எனவே, சபாநாயகர் அவர்களே, 2024 ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வர்த்தமானியை தேர்தல்கள் ஆணைக்குழு இன்று காலை வெளியிட்டுள்ளது. எமது பொலிஸ் மா அதிபர் தொடர்பில் நவம்பர் 11 ஆம் திகதி வரை பணிகளை இடைநிறுத்தி வைத்துள்ள உயர் நீதிமன்றத்தின் உத்தரவு செல்லுபடியற்றதாக்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் கௌரவ சபாநாயகருக்கும், பாராளுமன்றத்திற்கும் நினைவுபடுத்துகின்றோம். நன்றி.





டுபாய் அந்தரா கலைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் தமது குருவான கலைக் கல்லூரியின் அதிபர் திருமதி விம்மி பகவதிஷ்வருடன் இலங்கை வந்து நடத்திய மாபெரும் நாட்டிய நடன நிகழ்ச்சி மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்...